விலை: 30.00
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 தை 23 வியாழக்கிழமை (06.02.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 49

கொரோனா வைரஸ் தொடர்பில்

## பொதுமக்கள் யாரும் பீதியடைய வேண்டாம்

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி தெரிவிப்பு

(3ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலையிலிருந்து மகனை ஏற்றி சென்ற இளம் தாய் விபத்தில் பலி



வவுனியாவில் சம்பவம்;
மேலும் இருவர் படுகாயம்

(வவுனியா)
பாடசாலையில் இருந்து தனது மகனை வீட்டுக்கு ஏற்றிச் சென்ற இளம் தாய் ஒருவர் விபத்தில் மரணமடைந்ததுடன் மாணவன் உட்பட 23

## வீதி விபத்தில் சிக்கிய 5 பிள்ளைகளின் தாய் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)
மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

கடந்த 28ஆம் திகதி தனது மகனுடன் மோட்டார் சைக்கிளில் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு சென்ற போது மோட்டார் சைக்கிள் சுன்னாகம் பகுதியில் விபத்துக்குள்ளானதில் குறித்த பெண் 23

## பாதுகாப்பு படையினர் ஐவர் பொது மன்னிப்பில் கோட்டாவால் விடுதலை

(கொழும்பு)
சிறைத்தண்டனை அனுபவித்து வரும் பாதுகாப்பு படையினர் ஐவர் பொதுமன்னிப்பின் அடிப்படையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்தியே கோட்டாவால் பாதுகாப்பு படையினர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.



இலங்கையின் 72ஆவது சுதந்திர தினததை முன்னிட்டு ஜனாதிப்தியால் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த ஐவருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள 23

16 வயது மாணவி

## கோண்டாவில் பகுதியில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
பாடசாலை மாணவி ஒருவர் கோண்டாவில் குட்சிற்றோட் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த 16 வயதுடைய சிவரூபன் ரிஸ்வினி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரின் மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண 23

நல்லூர் சங்கிலியன் பகுதியில்

## இளம் யுவதி சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் - நல்லூர். சங்கிலியன் பகுதியில் இளம் யுவதி ஒருவர் நேற்று மதியம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அதே பகுதியை 23

கொரோனா வைரஸ் தொற்று

## மாணவி ஒருவர் யாழ்.போதனாவில் பரிசோதனைக்காக அனுமதி

(யாழ்ப்பாணம்)
கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் வவுனியாவைச் சேர்ந்த 25 வயது மாணவி ஒருவர் 23

## மலசலகூட குழியிலிருந்து துப்பாக்கி மீட்பு

(கரணவாய்)
மல்லாவி பிரதேசத்திலுள்ள மலசலகூட குழி ஒன்றிலிருந்து ரி56 ரக துப்பாக்கி மகசீன்களும் அதற்கான ரவை 23

## விசர் நாய்க்கடிக்கு இலக்கான குடும்பஸ்தர் உயிரிழப்பு

புதுக்குடியிருப்பில் சம்பவம்

(புதுக்குடியிருப்பு)
விசர்நாய்க்கடிக்கு இலக்கான குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு உடையார்கட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. 23

காங்கேசன்துறையில்

## கஞ்சாவுடன் 3 பேர் கைது

(யாழ்ப்பாணம்)
காங்கேசன்துறை கடற்பகுதியில் கேரள கஞ்சா வைத்திருந்ததாக சந்தேகிக்கப்படும் மூன்று சந்தேகநபர்கள் கடற் 23

## கிராம அலுவலரினால் வழங்கப்படும் சான்றிதழ்களுக்கு

பிரதேச செயலரின் ஒப்பம் தேவையில்லை
பெப்ரவரி 10 முதல் புதிய நடைமுறை

(கொழும்பு)
கிராம அலுவலரினால் வழங்கப்படும் சான்றிதழ்களுக்கு பிரதேச செயலரின் ஒப்பம் பெறும் நடைமுறை இரத்துச் செய்யப்படுவதாக பொது 23

## வடமராட்சி கிழக்கு கட்டைக்காடுப் பகுதியில்



32 கிலோ கஞ்சா மீட்பு;
சந்தேகத்தில் ஒருவர் கைது

(முறிகண்டி)
கிளிநொச்சி பளைப் பொலிஸ் 23

## நடந்து சென்ற வயோதிபர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில்

அவர் ஸ்தலத்திலேயே பலி
துன்னாலை வேம்படிப் பகுதியில் சம்பவம்

(கரணவாய்)
வீதியால் நடந்து சென்ற வயோதிப மாது ஒருவரை மோட்டார் சைக்கிள் மோதித் தள்ளியதில் அவர் ஸ்தலத்திலேயே பலியானதுடன் மோட் 23

# கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் காணிப் பதிவகத்தில் காணி மேலதிக மாவட்டப் பதிவாளராகக் கடமையாற்றும் **திருமதி குணாஜினி சதீஸ்குமார்** அவர்களின் பாசமிகு மாமன்னார்

**பாஸ்கரநாயர் குணபாலன்**

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம், உதவிப்பதிவாளர் நாயகம் அலுவலகமும் காணி மாவட்ட பதிவகமும் - யாழ்ப்பாணம்.**

(C-9164)

# தேவை

140, பலாலி வீதி, திருநெல்வேலியில் உள்ள எமது கணக்கியல் நிறுவனத்திற்கு காரியாலய உதவியாளர் தேவை. ஓரளவு ஆங்கில அறிவுடைய ஆகக்குறைந்தது GCE (A/L) சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். நிறுவனத்திற்கு அண்மையாக வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு :- **077 953 0496**

(2058)

# வீடு வாடகைக்கு

சிறிய குடும்பம் ஒன்றுக்கு சுண்டுக்குளி காட்டுக்கந்தோர் வீதியில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு :-

**077 315 1500**

(C-9163)

# ரஷ்ய இராணுவ தளபதி ஜனாதிபதியுடன் சந்திப்பு



(கொழும்பு)

ரஷ்ய இராணுவ தளபதி சல்யுகோ ஒலேக் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தார்.

கடந்த 3 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்த அவர், 72வது தேசிய சுதந்திர தின விழாவில் விசேட விருந்தினராகக் கலந்துகொண்டார்.

ஜெனரல் ஒலேக்குடன் இலங்கைக்கு வருகை தந்துள்ள ரஷ்ய இராணுவத்தின் உயர்மட்டப் பிரதிநிதிகளும் இந்த சந்திப்பில்கலந்து கொண்டனர். (ம)


பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்

- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜவசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
- கணவன் – மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்



ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசிய முறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (C-9161)

**ரெங்கசாமி** கண்டி, அம்பத்தன்ன - **077 112 3471** Viber - 076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


காரைநகர்

# கிழவன்காடு கலாமன்றம் யாழ் கிளை

## தைப்பூச நாள் வகுப்பு

புதிய மாணவர்களுக்கான அனுமதியும் நாள் வகுப்பும்



நடைபெற்றுவரும் கலைவகுப்புக்களில் புதிதாக இணைய விரும்பும் கலை மாணவர்களுக்கான அனுமதியும் நாள் வகுப்பும் எதிர்வரும் 08.02.2020 சனிக்கிழமை பி.ப 4.00 மணிக்கு நடைபெறும்

**பதிவாளர் - 077 578 6638**

**கிழவன்காடு கலாமன்றம், யாழ்கிளை**

(C-9154)


வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603 / 021 567 1532


# சேவை நலன் பாராட்டு

## உயரிய சேவையை உளமார வாழ்த்துகிறோம்!



## திருமதி ஜெகநாயகி இளங்கீரன்

(Trd.Music. SLTS 1) (ஆசிரியை யா/யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை)

### சேவை

| | | |
|---|---|---|
| யா / கெற்பெலி அ.த.க.பாடசாலை | 1992.09.01 - | 1993.05.09 |
| யா / புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் ம.வி | 1993.05.10 - | 1997.05.01 |
| யா / வேலணை துரைச்சாமி ம.வி | 1997.05.02 - | 1998.09.30 |
| யா / சென் றோக் வித்தியாலயம் | 1998.10.01 - | 1999.03.08 |
| யா / யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை | 1999.03.09 - | 2020.02.05 |

இந்து மகளிர் ஆரம்பப் பள்ளியிலே இரு தசாப்த காலமதில் கவினுறு அழகியலைக் களிப்புடனே கற்றுத்தந்து கோட்டம் முதல் தேசியம் வரை மாணவரைக் கொண்டு சென்று வெற்றிகள் பல பெற்று உயரிய சேவையினை உன்னதமாய் வழங்கி நின்ற எம் ஆசிரியையின் அறுபதாம் அகவை தனில் அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்! வாழ்விலே இனிதாக வளமாக நலமாக வாழ்க என்று வாழ்த்துகிறோம்.

*வாழ்க! வாழ்க!!*

**அன்புடன் வாழ்த்தி நிற்கும் - ஆசிரியர் நலன் புரிக்கழகம், பாடசாலைச் சமூகம் யா/யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.**

(2038)

# அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில் தைப்பூச தின உலகப்பெருமஞ்சத் திருவிழா



**காலம் :- 08.02.2020 சனிக்கிழமை**

**காலை :- 6.00 மணிக்கு பால்குடப்பவனி இணுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும்**

**காலை 10.00 மணி தொடக்கம் 4.00 மணி வரை நடைபெறும் பொங்கல் விழா. இரவு 7.00 மணிக்கு உலக பெருமஞ்சத்தில் முருகப்பெருமான் வீதி வலம் வருவார்**

குறிப்பு :- பால் குடம் எடுக்கும் அடியவர்கள் வரும் வெள்ளிக்கிழமைக்குள் ஆலயத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்.

**பருத்தியான் திருமண சேவை**
K.K.S வீதி, முத்தட்டு மட்டு
வைரவர் கோவிலடி,
கோண்டாவில்.

**கல்விக்கரம் உதவிமையம்**
போதை ஒழிப்போம் நம்பாதையை
நாமே வகுப்போம்
கல்விக்கரம் இயக்குநர் : **திரு.K.கருணாகரன்**
T.P : 077 320 6555

(C-9162)

## யாழ்ப்பாண மக்களே!

# கொரோனா வைரஸ் தொடர்பில் பீதியடையத் தேவையில்லை!

## யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவிப்பு



**(யாழ்ப்பாணம்)**

**யாழ்.போதனா வைத்தியசாலையில் கொரோனா வைரஸிற்கான சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் யாழ்ப்பாண மக்கள் பீதியடையத் தேவையில்லை எனவும் யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர். ரி.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.**

யாழ்.போதனா வைத்தியசாலையில், நேற்று இடம்பெற்ற ஊடவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸிற்கான சிகிச்சைப் பிரிவு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், வைரஸ் தொற்று இருக்குமோ என்ற சந்தேகத்திற்கிடமானவர்களை அனுமதித்து, விசேட சிகிச்சைகள் அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் வைத்திய நிபுணர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தயார் நிலையில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

பூரண சிகிச்சை அளிப்பதற்கான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், கொரோனா வைரஸ் தொடர்பான சிகிச்சை அளிப்பதற்கு சுகாதார அமைச்சு உரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இதனால், யாழ்ப்பாணத்தில், குறிப்பாக வடமாகாணத்திலுள்ள மக்கள் கொரோனா வைரஸ் தொடர்பில் பீதியடையத் தேவையில்லை என்றும், சீனப் பெண் தவிர்ந்த ஏனைய எவரும், கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் இதுவரை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படவில்லை என்றும் சுட்டிக் காட்டினார்.

எனவே, கொரோனா வைரஸ் தொடர்பாக மக்கள் பயப்பட தேவையில்லை. அத்துடன், முகக்கவசம் அணியத் தேவையில்லை.

தொற்றுக்குள்ளான நபர் ஒருவருடன் நெருக்கமாக பழகும் போதும் அதாவது 2 மீற்றர் தூரத்திற்கு நெருக்கமாக பழகும் போது, பரவும் வாய்ப்பு உள்ளதாகவும் அதனால், இந்த தொற்று தொடர்பில் மக்கள் எந்தவித பயமும் அடையத் தேவையில்லை என்றார்.

சில நேரங்களில், வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் தமக்கு இருக்குமோ என்ற சந்தேகத்தில் வைத்தியசாலைக்கு பரிசோதனை செய்வதற்காக வருகின்றனர். அவ்வாறு வருபவர்களுக்கான உரிய பரிசோதனைகள் செய்யப்படுகின்றதென்றும் இதுவரையில் 17 பேருக்கு பரிசோதனைகள் செய்யப்பட்ட போதும் சீனப் பெண் ஒருவரே அடையாளப்படுத்தப்பட்டுள்ளார் எனவும் தெரிவித்தார்.

இருமல் மற்றும் சளி இருப்பவர்கள் இவ்வாறு பரிசோதனை செய்வதற்காக வருகின்றார்கள். இவர்கள் மிகவும் பாதுகாப்பான முறையில் பரிசோதனைக்குட்படுத்தப்படுவதாகவும் கொரோனா வைரஸ் பற்றிய எந்தவித பயமும் பொதுமக்களுக்குத் தேவையில்லை என்றும் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் உள்ளிட்ட வைத்தியக் குழுவினர் தெரிவித்தனர். (இ-101)

# குண்டுத்தாக்குதலுக்கான பொறுப்பிலிருந்து ஒருபோதும் மைத்திரி விடுபட முடியாது

## மகேஷ் உடும்புப் பிடி





(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையில் நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவத்திற்கு பொறுப்புக் கூற வேண்டிய பொறுப்பிலிருந்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒருபோதும் விடுபட முடியாது என முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கான பொறுப்பை முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர ஆகியோர் மீது சுமத்தி விட்டு, அந்தப் பொறுப்பிலிருந்து முன்னாள் ஜனாதிபதி தப்பிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

குண்டுத் தாக்குதல் சம்பவம் நடந்த போது மகேஷ் சேனநாயக்கவே இராணுவத் தளபதியாக பதவி வகித்தார். அதே வேளை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சராக கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சுமந்திரன் தலைமையில் அரச நிதிக்குழு நியமனம்



(கொழும்பு)

அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நியமிக்கப்பட்டார்.

அத்துடன் நிதி பற்றிய குழுவுக்கான 13 பேரின் .விபரங்களையும் சபாநாயகர் கரு ஜெயசூரிய நேற்றுப் பாராளுமன்ற அமர்வில் அறிவித்துள்ளார்.

அதன்படி எம்.ஏ.சுமந்திரன், கெஹலிய ரம்புக்வெல, ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, சுசந்த புஞ்சிநிலமே, தாரக்க பாலசூரிய, காஞ்சன விஜேசேகர, டிலான் பெரேரா, பிமல் ரத்நாயக்க, மயந்த திஸாநாயக்க, முஜிபுர் ரஹ்மான், ஆசு மாரசிங்க மற்றும் மொஹமட் இஷ்மாயில் ஆகியோர் இக்குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். (இ-7)

# சலுகை விலையில் அத்தியாவசியப் பொருட்கள்

## நாடாளுமன்றில் பிரதமர் அறிவிப்பு

(கொழும்பு)

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 10 அத்தியாவசியப் பொருட்களை சலுகை விலையில் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. அதன்படி மார்ச் முதலாம் திகதி முதல் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். லங்கா சதொச மற்றும் கூட்டுறவுச் சங்கங்களில் இவ்வாறு குறைந்த விலையில் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# 26 கிலோ கேரளக் கஞ்சாவுடன் இளவாலையில் இளம் பெண் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.இளவாலைப் பகுதியில் 26 கிலோ 198 கிராம் கேரளக் கஞ்சாவுடன் பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து இளவாலைப் பொலிஸாரால் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது கேரளக் கஞ்சாவுடன் குறித்த பெண் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.


இளவாலையைச் சேர்ந்த இளம் பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். (இ-7)

### இந்தியா-நியூசிலாந்து ஒருநாள் தொடர்


# ரொஷ் ரெயிலரின் அதிரடிச் சதத்தினால் இந்தியாவை வீழ்த்தியது நியூசிலாந்து

## TAYLOR STARS IN BIG CHASES

HIGHEST ODI TARGETS CHASED BY NZ



348 v IND, 2020
TAYLOR 109*



347 v AUS, 2007
TAYLOR 11



337 v AUS, 2007
TAYLOR 117



336 v ENG, 2018
TAYLOR 181*

சுற்றுலா இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி 06 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள விராட் கோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி, 5 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை 5-0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றி வரலாறு படைத்தது.

இதனை அடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி நேற்று ஹமில்டனில் இடம்பெற்றது. இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதன்படி இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

உபாதை காரணமாக நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் தொடக்க வீரர்களான ஷிகர் தவான் மற்றும் ரோஹித் சர்மா ஆகியோர் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

இந்நிலையில், நேற்று தொடக்க வீரர்களாக களம் இறங்கிய இளம் வீரர்களான பிரித்வி ஷா மற்றும் மயங்க் அகர்வால் ஆகியோர் சற்று அதிரடியாக ஆடினர். ஆனால் மிகப்பெரிய அளவில் அவர்கள் ஓட்டங்களைக் குவிக்கவில்லை.

பிரித்வி ஷா 20 ஓட்டங்களிலும் அகர்வால் 32 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இதையடுத்து அணித் தலைவர் விராட் கோலி, ஷ்ரேயஸ் ஐயர் ஜோடி இணைந்தது.

நிதானமாக ஆடிய கோலி அரைச்சதம் கடந்த நிலையில் 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதையடுத்து கே.எல் ராகுல் களமிறங்கினார். ஒரு புறம் ஷ்ரேயஸ் ஐயர் நிதானமாக ஆட மறு முனையில் கே.எல் ராகுல் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

சிறப்பாக விளையாடிய ஷ்ரேயஸ் ஐயர் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் தனது முதல் சதத்தை பதிவு செய்தார். அவர் 107 பந்துகளில் 11 நான்கு ஓட்டங்கள் மற்றும் ஒரு சிக்சர் உட்பட 103 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார். மற்றொருபுறம் அதிரடியாக விளையாடிய ராகுல் 64 பந்துகளில் 6 சிக்சர்கள் மற்றும் 3 பவுண் டரிகள் உட்பட 88 ஓட்டங்கள் குவித்தார்.

இறுதியாக நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில், இந்திய அணி 4 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 347 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலுக்கு 348 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து அணி களமிறங்கியது.

அந்த அணியின் தொடக்க வீரர்களாக மார்டின் குப்டில், நிகோலஸ் ஆகியோர் வலுவான அடித்தளத்தை அமைத்தனர். நடுவரிசையில் வந்த ரோஸ் டெய்லர் மற்றும் ரொம் லாதம் ஆகியோர் அதிரடியாக விளையாடினர்.

இறுதியில் சாட்னர், சிக்ஸரையும் பவுண்டரியையும் பறக்கவிட நியூசிலாந்து அணி 11 பந்துகள் மீதமிருக்க வெற்றி இலக்கை அடைந்தது.

ரோஸ் டெய்லர் தனது 20 ஆவது ஒருநாள் சதத்தைப் பூர்த்தி செய்து, 109 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றிருந்தார்.

நிகோலஸ் 78 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். உலகின் முதன் நிலைப் பந்துவீச்சாளர்களான பும்ரா, சமி போன்றவர்களாலும் இறுதியில் நியூசிலாந்தின் வெற்றியைத் தடுக்க முடியாது போனது.

## நல்லூர் பிரதேச செயலக எல்லே அரியாலை ஐக்கிய.வி.க சம்பியன்





நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான எல்லே போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டிகளில் அரியாலைஐக்கிய விளையாட்டுக் கழகமும் நொதேண் விளையாட்டுக் கழகமும் இறுதிப்போட்டிக்கு தெரிவாகியது.

நடைபெற்ற இறுதிப்போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று தங்கப்பதக்கத்தை சுவீகரித்தது.

(ம)

## தொடர்ந்து மூன்றாவது முறை இந்திய அணிக்கு 80% அபராதம்

ஹேமில்டனில் நடந்த நியூஸிலாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணிக்குப் போட்டி ஊதியத்தில் இருந்து 80 சதவீதம் அபராதமாக விதித்து போட்டி நடுவர் உத்தரவிட்டுள்ளார்.

ஹேமில்டனில் நேற்று நடந்த முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி 50 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 347 ரன்கள் சேர்த்தது. 348 ரன்கள் சேர்த்தால் வெற்றி எனும் மிகப்பெரிய இலக்குடன் களமிறங்கிய நியூஸிலாந்து அணி 11 பந்துகள் மீதமிருக்கையில் 348 ரன்கள் சேர்த்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் பந்து வீசாமல் இந்திய வீரர்கள் அதிகமான நேரம் பந்து வீசுவதற்கு எடுத்துக்கொண்டதாக ஐசிசி போட்டி நடுவரிடம் கள நடுவர்கள் போட்டி நடுவரிடம் புகார் அளித்தனர். அதாவது நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுக்குள் 50 ஓவர்களை வீசாமல் 46 ஓவர்கள் மட்டுமே வீசினர். இதையடுத்து, இந்திய அணிக்குப் போட்டி ஊதியத்தில் இருந்து 80 சதவீதம் அபராதமாக ஐசிசி விதித்தது.

ஐசிசி ஒழுங்கு நடத்தைவிதி 2.22 பிரிவை மீறியதால் இந்திய அணியின் வீரர்கள், வீரர்களின் உதவி ஊழியர்கள் ஆகியோருக்குப் போட்டி ஊதியத்தில் இருந்து 20 சதவீதம் அபராதமாகவும் விதிக்கப்பட்டது.


இதுகுறித்து ஐசிசி வெளியிட்ட அறிவிப்பில்; "நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் பந்து வீசாமல் அதிகமான நேரம் எடுத்துக்கொண்ட குற்றச்சாட்டை இந்திய அணியின் கேப்டன் விராட் கோலி ஏற்றுக் கொண்டார். தங்களின் அணியின் தவறை உணர்ந்து அபராதம் விதிப்பதைச் செலுத்துவதாகத் தெரிவித்துள்ளார். ஆதலால், முறைப்படியான விசாரணை ஏதும் தேவையில்லை" எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே, 4-வது ரி20 போட்டியின் போது பந்து வீச அதிகமான நேரம் எடுத்துக்கொண்டமைக்கு 40 சதவீதம் அபராதமும், 5-வது டி20 போட்டியில் 20 சதவீதம் அபராதமும் ஐசிசி விதித்தது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் இந்திய அணிக்குத் தொடர்ந்து 3-வது முறையாக அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.



# புலிகளின் தலைவர் பிரபாகரனைப் போன்று போர் தொடுக்கக்கூடிய சூழல் தற்போதில்லை

## தேசிய கீத விவகாரத்தை வைத்து பிரிவினையை உருவாக்க வேண்டாம் சம்பந்தனிடம் சு.க.பேச்சாளர் வீரகுமார கோரிக்கை





(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனைப் போன்று மீண்டும் ஒரு போரை தொடுக்கக் கூடிய சூழல் தற்போது இல்லை எனவும் தேசிய கீத விவகாரத்தை பிரிவினைவாதத்துக்கு பயன்படுத்தும் நோக்கத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கைவிட வேண்டும் எனவும் மொழிப் பயன்பாடு குறித்து இந்தியாவின் அனுபவங்களைப் பெற்றுக் கொள்வது சிறந்தது என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் இரா.சம்பந்தன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கலந்து கொள்ளாமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதும், அதனைப் புறக்கணிக்க தீர்மானிப்பதும் அவரவர் உரிமையாகும். எனினும் நிகழ்வில் கலந்து கொள்ளாமைக்கு அவர்களால் கூறப்படும் காரணத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

மொழி என்பது தொடர்பாடலுக்கான ஒரு மூலம் மாத்திரமேயாகும். எனவே தேசிய கீதம் தமிழில் பாடப்படாமையை மொழியை அடிப்படையாகக் கொண்ட பிரச்சினையாக மாற்ற எத்தனிக்கக் கூடாது.

பிரபாகரனைப் போன்று யுத்தத்தில் ஈடுபடக் கூடிய சூழல் தற்போது இல்லை என்பதை சம்பந்தன் புரிந்து கொள்ள வேண்டும்.

எதிர்க்கட்சியாக இருந்தாலும் ஜனாதிபதியுடன் இணைந்து நாட்டு மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளில் இணைந்து கொள்வது பற்றியே அவர்கள் தற்போது சிந்திக்க வேண்டும்.

அதனை விடுத்து தமிழ் மொழி, சிங்களமொழி எனக் கூறிக் கொண்டு பிரச்சினைகளை ஏற்படுத்துவது அநாவசியமானதாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 130 பில்லியன் ரூபாய் குறை நிரப்பு பிரேரணைக்கான அனுமதியைக் கோரியது அரசு

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தால் செலுத்தப்படாத கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக 130 பில்லியன் ரூபாய் குறை நிரப்பு பிரேரணைக்கான நாடாளுமன்ற அனுமதியை அரசாங்கம் கோரியது.


கடந்த அரசாங்கத்தின் செலவுகள் மற்றும் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை குறித்து நேற்றுப் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விளக்கினார்.

அத்தோடு இந்த குறை நிரப்பு பிரேரணை தொடர்பான முழுமையான வடிவம் இன்னும் சில தினங்களில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்றும் மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் இந்தக் குறை நிரப்பு பிரேரணை தொடர்பாக நாடாளுமன்றில் விவாதம் இடம் பெற வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேட்டுக்கொண்டார்.

கடந்த அரசாங்கத்தின் நிலுவைத் தொகையை வழங்குவதற்காக நாடாளுமன்றத்தில் குறை நிரப்பு பிரேரணையை சமர்ப்பிக்கும் திட்டத்திற்கு அமைச்சரவை ஏற்கனவே அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## களிமண்ணால் அமைக்கப்பட்ட இலங்கையின் முதலாவது ஹோட்டல்



(கொழும்பு)

சீமெந்தைப் பயன்படுத்தாது களிமண்ணை மூலப்பொருளாகக் கொண்டு சுற்றாடலுக்கு பொருத்தமான வகையில் நாட்டில் அமைக்கப்பட்ட முதலாவது நட்சத்திர ஹோட்டல் சிகிரியாவில் நேற்றுத் திறக்கப்பட்டது.

ஆயுர்வீ என்று இந்த சுற்றுலா ஹோட்டலுக்கு பெயரிடப்பட்டுள்ளது. இது ஆயுர்வேத சிகிச்சை ஹோட்டலாகும் என்று Theme Resorts & Spas நிறுவனத்தின் தலைவர் சந்திரா விக்ரமசிங்க தெரிவித்தார்.

இங்கிலாந்தைச் சேர்ந்த ரட்லன் ரிஹி எமாமெனஸ் நிறுவனத்தின் தலைவரின் தலைமையில் நேற்றுக் காலை இந்த ஹோட்டல் திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

## சீனாவின் மூன்று பிரதேசங்களுக்கான ஸ்ரீலங்கன் விமான சேவைகள் குறைப்பு

(கொழும்பு)

கொழும்பில் இருந்து சீனாவின் மூன்று பிரதேசங்களுக்கான விமான சேவைகள் குறைக்கப்பட்டதாக ஸ்ரீலங்கன் விமான சேவை தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பயணிகளின் பயணங்கள் குறைவடைந்துள்ள காரணத்தால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என மேலும் தெரிவித்துள்ளது. (ஜ)

## லதீப்பின் பதவி வெற்றிடத்திற்கு இருவர் பரிந்துரை

(கொழும்பு)

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம்.ஆர்.லதீப் ஓய்வுபெற்றதையடுத்து அவரின் பதவிக்குத் தகுதிவாய்ந்த ஒருவர் பெயரிடப்படவுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்காக பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பதவிக்கு 2 பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன.

இது தொடர்பில் பதில் பொலிஸ்மா அதிபரால் பொலிஸ் ஆணைக்குழுவிற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

பிரதி பொலிஸ்மா அதிபர்களான லயனல் குணதிலக்க மற்றும் வருண ஜயசுந்தர ஆகியோரின் பெயர்களே இதற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை 41 வருடங்கள் பொலிஸ் சேவையாற்றிய M.R.லதீப் நேற்றுடன் ஓய்வு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

## கண்ணீர் அஞ்சலி



அமரர் திரு.

**பாஸ்கரநாயர் குணபாலன்**

யா/சென்ஜேம்ஸ் மகளீர் பாடசாலையின் கணித பாட ஆசிரியரான திரு. **கு.சதீஸ்குமார்** அவர்களின் தந்தையார் **திரு.பாஸ்கரநாயர் குணபாலன்** அவர்கள் 01.02.2020 சனிக்கிழமை அன்று இறைபதம் எய்தியுள்ளார். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

"ஓம் சாந்தி"

**பாடசாலைச் சமூகம்,**
**யா/சென் ஜேம்ஸ் மகளிர், பாடசாலை**

# ராஜ கிராமத்தில் தேங்கும் வெள்ளத்தை வெளியேற்ற பாரிய நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட ராஜகிராமத்தில் வெள்ளம் தேங்குவதால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் அண்மையில் நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

சுமார் 85 குடும்பங்களைச் சேர்ந்த 200 பேர் வரை வசிக்கும் ராஜகிராமத்தில் மழை காலங்களில் வெள்ள நீர் தேங்குவதால் பாரிய சுகாதாரப் பிரச்சினைகளை குறித்த பகுதி மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

மழை காலங்களில் வெள்ள நீர் வழிந்தோட முடியாமல் அயல் பிரதேச நீரும் குறித்த பகுதியில் வந்து சேர்கிறது.

இந்நிலையில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பில் ஆராயப்பட்டது.

குறித்த பகுதியில் தேங்கும் வெள்ளத்தை வெளியேற்றுவதற்காக அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் கீழ் பாரிய நிதி ஒதுக்கீடு செய்யத் தீர்மானித்த அதேவேளை குறித்த பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வீட்டுத்திட்ட வீடுகளின் உறுதித்தன்மையைப் பரிசீலித்து தொடர்மாடிக் குடியிருப்புக்களாக மாற்றுவதற்கான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன. (இ-10-60)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் என்.சபாரத்தினசிங்கி தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக கனடா குடிவரவு நிர்வாகி யோக.சண்முகம் பிள்ளை கலந்து கொள்வார். (இ-2.5)

---

(யாழ்ப்பாணம்)

துன்னாலை வடக்கு மெ.மி.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் சி.லிங்கனதாஸ் தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் கலந்து கொள்வர். (5)

---

(குப்பிழான்)

குப்பிழான் விக்னேஸ்வரா மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 01.30 மணி முதல் குப்பிழான் வடக்கில் அமைந்துள்ள விக்னேஸ்வரா விளையாட்டு மைதானத்தில் அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் ஆயுர்வேத வைத்தியர் பொ. சிவஞானசுந்தரம், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் கமநல சேவைகள் திணைக்களக் கணக்காளர் கு.சுரேஸ்குமார், வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் நா.புவன் சிறிந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-18)

# மஞ்சத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோவில் தைப்பூச மஞ்சத் திருவிழா நாளை மறுதினம் 8ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும். இதில் காலை 6 மணியளவில் பால்குடப் பவனி இணுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து முற்பகல் 10 மணியளவில் பொங்கல் விழா ஆரம்பமாகி இரவு 7 மணியளவில் திருமஞ்சனப் பெருவிழா நடைபெறும். (இ-5)

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## இராசிக் குறியீடுகளை பயன்படுத்தும் விதம்




ரிஷபம்

ரிஷப ராசியின் உருவம் மாடு ஆகும். மாடுகளை கடினமான வேலை செய்வதற்கு நாம் பயன்படுத்துகிறோம். அதாவது நமக்கு பயன்படும் வகையில் பழக்கப்படுத்தி வைத்திருக்கிறோம். இதனால் ரிஷப இராசியினர் பிறருக்கு கீழ்ப்படிந்து நடப்பர் என்றும் நல்ல உழைப்பாளிகள் எனக் கூறப்படுகிறது.

மாடுகளை ஒரு குறிப்பிட்ட வேலைக்குப் பழக்கி விட்டால் அவை தன் பழக்கத்தை எளிதில் மாற்றிக் கொள்ளாது. உதாரணத்திற்கு செக்கு மாடுகளைக் கூறலாம்.

இதனால் ரிஷப இராசியினர் மாற்றங்களை விரும்பாதவர்கள் எனப்படுகிறார்கள். மாடுகளுக்கு இனப்பெருக்க காலம் என தனியாக எதுவும் கிடையாது.

# வேலணைத் துறையூர் மீன் சந்தை குத்தகைப்பணம் வழங்கப்படவில்லை

## பேசிப்பெறுவோம் என்கிறார் தவிசாளர்

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட துறையூர் மீன் சந்தைக்கான குத்தகைப்பணம் பல வருடங்களாக பிரதேச சபைக்கு வழங்கப்படவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டது.

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட துறையூர்ப் பகுதியில் மீன் சந்தைக்கான நிரந்தரக் கட்டடம் மகிந்த ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்டது. இங்கு வியாபார நடவடிக்கைகள் இடம் பெற்றுவரும் நிலையில் குறித்த சபைக்கு எவ்விதமான குத்தகைப்பணமும் வழங்கப்படுவதில்லை.

இது தொடர்பில் வேலணைப் பிரதேச சபைத் தவிசாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது எமது சபை ஆரம்பித்த காலம் தொடக்கம் குறித்த சந்தை குத்தகைப் பணம் வழங்கப்படவில்லை.

எனவே சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் பேசி சந்தைக்கான குத்தகைப்பணத்தைப் பெறும் முயற்சிகள் இடம்பெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் தமிழ் நாட்டு பண்ணிசைக் கலைஞர்களின் திருமுறை விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையின் ஏற்பாட்டில் தமிழ் நாட்டின் பண்ணிசைக் கலைஞர்கள் பங்குபற்றும் திருமுறை விழா எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் இந்து சமயப் பேரவையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் திருமுறைப் பாராயணச் செல்வர்கள் கௌரவிப்பு மற்றும் இந்திய பண்ணிசைக் கலைஞர்கள் கௌரவிப்பும் இடம் பெறவுள்ளதுடன் இந்தியக் கலைஞர்களின் பண்ணிசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது.

இதில் அந்தண சிவாச்சாரியார்களையும் சைவக் குருமார்களையும் ஆலய அறங்காவலர்களையும் இசைக் கலைஞர்களையும் தவில் நாதஸ்வர வித்துவான்களையும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களையும் இந்து கலாசார அலுவலர்களையும் சைவத் தமிழ் ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஐ)

# இராசி பலன்

**மீனம்** — எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், தொலைதூரத்திலிருந்து சுபசெய்திகள் வந்து சேரலாம், பிரயாண சுகமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மேடம்** — நீண்டநாளைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், தொழிலில் சிக்கனம் காட்டி சேமிக்க முற்படுவீர்கள்.

**இடபம்** — பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்** — மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று இடம் பெறலாம், குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.

**கும்பம்** — வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரும் நாள், புதிய முயற்சிகள் கைகூடும்.

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| சுக் | | | சந் ராகு |
| புத | இராசி பலன் | | |
| சூரி, | கிரகநிலை | | |
| சனி, கேது, குரு | செவ் | | |

சந்திராஷ்டமம்
அனுசம், கேட்டை

**06.02.2020**

தை 23, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு
துவாதசி மாலை 6.04 மணிவரை
திருவாதிரை முன்னிரவு 11.25 மணிவரை
சுபநேரம் 8.05-9.35 மணிவரை
இராகுகாலம் 2.05-3.35 மணிவரை
பிரதோச விரதம்
வருமுன்னர் காக்கா விட்டால்
வாழ்க்கை பாழாம்

வளவன்

**கடகம்** — அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் பணி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள்.

**மகரம்** — உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், மகிழ்ச்சிதரும் செய்திகள் வந்து சேரலாம், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், கௌரவமான நாள்.

**சிம்மம்** — வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொன்னான நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

**தனுசு** — குடும்ப நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொழிலை விரிவுபடுத்த முயற்சிகள் எடுப்பீர்கள், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், உடல் நலன் சீராகும்.

**விருச்சிகம்** — வரவும் செலவும் சமமாகும் நாள், வழிபாடு குதூகலம் தரும், எதிர்பாராத வகையில் திடீர் மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், முயற்சிகளில் சிறு தாமதம் ஏற்படலாம்.

**துலாம்** — பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொழில் வளர்ச்சிக்குக் குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவார்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், ஆரோக்கியமான நாள்

**கன்னி** — கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு

# அரசாங்கம் அறிவித்தபடி ஆயிரம் ரூபாய் நாளாந்த வேதனம் வழங்குவது உறுதி

## நாடாளுமன்றில் பிரதமர் மகிந்த அறிவிப்பு

(கொழும்பு)

**தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த வேதனமாக ஆயிரம் ரூபாய் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**



சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் நேற்றுப் புதன் கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின்போது, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க இந்த விடயம் தொடர்பாக கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் மகிந்த, கடந்த அமைச்சரவை கூட்டத்தின் போது, தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்க அமைச்சரவையால் அனுமதி வழங்கப் பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

அத்தோடு இதற்கு தொழிற் சங்கங்களும் இணக்கம் தெரிவித்துள்ளன என்றும் தோட்டத்தொழிலாளர்களுக்கு 1000 ரூபாய் நாளாந்த வேதனத்தை வழங்குவதே இந்த அரசாங்கத்தின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

அந்தவகையில் மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் அவர்களுக்கான வேதனங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இருப்பினும் இதற்குப் பல தொழிற்சங்கங்கள் இணக்கம் தெரிவிக்கவில்லை என செய்திகள் வெளியாகின என அநுர குமார திஸாநாயக்க மீண்டும் கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த துறை சார் அமைச்சர், சம்பள அதிகரிப்பு தொடர்பாக சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளதாகவும் அதாவது 3 கட்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவித்தார்.

இதேவேளை தொழிற்சங்கங்கள் இதனை மறுத்தால் அவற்றினை அரசுடைமையாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளதை சுட்டிக்காட்டி அநுரகுமார திஸாநாயக்க மீண்டும் கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் மகிந்த, அதற்கான அவசியம் தற்போது இல்லை என்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த வேதனமாக 1000 ரூபாவை அரசாங்கம் நிச்சயம் வழங்கும் என்றும் தெரிவித்தார். (இ-7)

# இரண்டு மணித்தியால மின்தடை விசாரணைக்குழு நியமனம்

## மகிந்தானந்த தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் சில பிரதேசங்களில் கடந்த திங்கட்கிழமை இரண்டு மணித்தியால மின் விநியோகத் தடை ஏற்பட்டமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க குழு நியமிக்கப்பட்டது.

எக்காரணிகளுக்காகவும் மின் விநியோகத்தடை தொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரம் இலங்கை மின்சார சபைக்கு கிடையாது என மின்வலுத் துறை இராஜாங்க அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

மின்வலுத்துறை அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை நாட்டின் சில பிரதேசங்களில் ஏற்பட்ட இரண்டு மணித்தியால மின் விநியோகத்தடை தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்தார்.

இலங்கை மின்சார சபை செலுத்த வேண்டிய கடன் தொகை வரைறையற்றதாக காணப்படுவதால் மின்சார சபைக்கு எரிபொருள் விநியோகத்தை தற்காலிகமாக இடைநிறுத்தினோம் என்று கனியவள கூட்டுத்தாபனம் குறிப்பிடும் காரணிகள் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் கடந்த திங்கட்கிழமை மின் விநியோகத்தடைக்கான காரணம் போதுமான எண்ணெய் அப்போது சேமிப்பில் இருக்கவில்லை என்று கூட்டுத்தாபனம் குறிப்பிடும் காரணியும் பொய்யானது என்றும் அன்றைய தினம் கெரவலப்பிட்டிய மின் நிலையத்தில் 1500 தொன் எரிபொருள் இருந்துள்ளது.

எனவே இவர்களின் முரண்பாடான கருத்துக்கள் பாரிய சந்தேகத்தினை ஏற்படுத்தியுள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்தார். இலங்கை மின்சார சபை பாரிய கடன் நெருக்கடிக்குள் உள்ளாவதற்கு கடந்த அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளே பிரதான காரணமாகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இலங்கை மின்சார சபை கனியவள கூட்டுத்தாபனத்திற்கு 2017 ஆம் ஆண்டு 30 பில்லியனும், 2019 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் 81 பில்லியனும் கடன் செலுத்த வேண்டியுள்ளதுடன்



தனியார் நிறுவனங்களுக்கு 2019 ஆம் ஆண்டு மாத்திரம் 39 பில்லியனும் அரச வங்கிகளுக்கு 120 பில்லியனும் கடன் செலுத்த வேண்டியுள்ள நிலைக்கு மின்சார சபை நட்டமடைந்த ஒரு சபையாக தொழிற்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டினார். இவ் வருடத்திற்குள் இந்த கடன்களை முடிந்த அளவிற்கு மீள் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். மின்சார சபையும் கனியவள கூட்டுத்தாபனமும் மின்வலுத்துறை அமைச்சின் கீழ் இயங்குவதால் தான்தோன்றித்தனமாக செயற்பட முடியாது. மின் விநியோகத் தடைக்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# எயார்பஸ் ஊழலை விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு வேண்டும்

## அஜித் மன்னப்பெரும வலியுறுத்து

(கொழும்பு)

எயார்பஸ் ஊழல் பற்றிய தகவல்கள் வெளியாகியிருப்பதுடன், அதனுடன் தொடர்புபட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவன அதிகாரி மற்றும் அவரது மனைவியைக் கைது செய்யுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் ஆனால் அவர்களிருவரும் விமானம் ஏறி, வெளிநாட்டிற்குச் சென்றதன் பின்னரே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் இவ்விவகாரம் குறித்து ஆராய்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமித்து, உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, இதனுடன் தொடர்புடையவர்கள் அனைவரும் கண்டறியப்பட வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும வலியுறுத்தினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

தற்போதைய அரசாங்கம் தேர்தலுக்கு முன்னர் நாட்டு மக்கள், பௌத்த தேரர்கள், தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் பொய்யான வாக்குறுதிகளை யளித்து, அவர்களை ஏமாற்றியே ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது.

ஆனால் அரசாங்கம் தங்களை ஏமாற்றியிருக்கிறது என்ற உண்மை இப்போது மக்களுக்குப் புரிய ஆரம்பித்திருக்கிறது. சம்பிக்க ரணவக்கவின் கைது, சுவிஸ் தூதரக ஊழியர் கடத்தல் விவகாரம், ராஜித சேனாரட்ன கைது, ரஞ்சன் ராமநாயக்கவின் தொலைபேசி உரையாடல் பதிவுகள் கசிவு விவகாரம், கொரோனா வைரஸ் தொற்று ஆகியவற்றைக் காண்பித்து கடந்த இரு மாத காலத்தில் உண்மையான பிரச்சினைகளிலிருந்து பொது மக்களின் கவனத்தைத் திசை திருப்பியுள்ளது.

அவ்வாறு திசைதிருப்பியது மாத்திரமன்றி திரைமறைவில் அவர்களுக்கு வேண்டிய காரியங்களையும் செய்து கொண்டிருக்கிறது என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஐ)

# மின்னஞ்சல் திட்டம் மூலம் 8 மில்லியன் டொலர் மோசடி

(கொழும்பு)

பல மில்லியன் டொலர் பெறுமதியான மின்னஞ்சல் திட்ட மோசடி குற்றச்சாட்டில் இலங்கையில் பிறந்த பிரித்தானியப் பிரஜை ஒருவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

பிரித்தானியாவின் வேல்ஸ் பொலிஸ் துறையின் இணையத்தளத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. கெனாபோன்க்ரௌன் நீதிமன்றம் இந்த தண்டனையை விதித்தது.

இதற்கமைய, கைகல்கினேன் என்ற 41 வயதுடைய இலங்கையில் பிறந்த பிரித்தானிய பிரஜைக்கு, 7 ஆண்டுகளும் 8 மாதங்களும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த 2018 ஆம் ஆண்டு நிறுவனம் ஒன்றின் மின்னஞ்சல் திட்டம் மூலம் 8 மில்லியன் டொலர் வரை மோசடியில் அவர் ஈடுபட்டுள்ளமை விசாரணைகளில் கண்டறியப்பட்டது.

இதற்கமைய, அவர் மீது, பணச்சலவை உள்ளிட்ட மேலும் சில குற்றங்கள் தொடர்பில் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# யாழ்ப்பாணத்தில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியேற மக்களுக்கு ஆர்வமில்லையா?

## கட்டளைத்தளபதியின் கருத்துக்கு மீள்குடியேற்றக்குழு கடும் கண்டனம்

(குப்பிழான்)

எமது மக்களின் பல காணிகள் விடுவிக்கப்பட்ட போதும் அவர்கள் மீள்குடியேறுவதற்குத் தாமதிப்பதற்குப் பல காரணங்களிருக்கின்றன.

கடந்த காலங்களில் மீள்குடியேறிய மக்களுக்கு இன்றுவரை முழுமையான வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை. பல நூற்றுக் கணக்கான மக்களுக்கு இன்னமும் மின்சார இணைப்பு வழங்கப்படவில்லை.

பல பாடசாலைகள் இன்னமும் புனரமைக்கப்படவில்லை. போக்குவரத்து வசதிகள் உரிய முறையில் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இவ்வாறான பல்வேறு நெருக்கடிகள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் காணப்படும் நிலையில் மக்கள் மீள்குடியேறுவதற்குச் சற்றுக் காலதாமதம் ஏற்படத் தான் செய்யும். அதற்காக எங்களுக்கு உரித்தான பரம்பரைக் காணிகளை நாம் விட்டுவிட முடியாது.

எனவே, எமது மக்களின் காணிகளை அடாத்தாகப் பிடித்து வைத்துள்ள இராணுவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய விடுவிக்கப்பட்ட பகுதிகளில் புதிதாக மீள்குடியேறுவதற்கு மக்களுக்கு ஆர்வமில்லை எனத் தெரிவித்துள்ள கருத்தை வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழு சார்பாகவும், பாதிக்கப்பட்ட எமது மக்கள் சார்பாகவும் மிகவும் வன்மையாக கண்டிக்கின்றோம் என வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழுவின் தலைவர் ச.சஜீவன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் பற்றைகளாகக் காணப்படுவதாகவும், குறித்த பகுதிகளில் மீள்குடியேறுவதற்கு மக்கள் ஆர்வம் காட்டவில்லை எனவும் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி அண்மையில் தெரிவித்திருந்த கருத்துத் தொடர்பில் சஜீவன் மேலும் தெரிவிக்கையில்,

சுமார் 9000 குடும்பங்கள் இன்னமும் வலி. வடக்கில் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டியுள்ளது. பல நூற்றுக்கணக்கான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நீண்டகாலமாக அகதி முகாம்களில் பெரும் சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய பிள்ளைகள் கல்விக்காக மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

இவ்வாறான நிலையில் விடுவிக்கப்படாத பகுதிகளில் இராணுவத்தினர் உல்லாச விடுதிகளையும், இராணுவ நிலைகளையும், விகாரைகளையும் அமைத்துள்ளனர். அத்துடன் எங்கள் மக்களின் நிலங்களில் விவசாயமும் செய்கின்றனர்.

நீண்டகாலமாக இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும், தனியார் வீடுகளிலும் எங்கள் மக்கள் பெரும் அவல வாழ்க்கை வாழ்ந்து வரும் சூழ்நிலையில் எப்போது தமது காணிகள் மீளவும் கிடைக்குமென்ற எதிர்பார்ப்புடன் எமது மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்நிலையில் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியின் கருத்துக்களைக் கேட்ட பின்னர் எங்கள் மக்கள் மிகவும் வேதனையும், கொதிப்பும் அடைந்துள்ளனர்.

வலிகாமம் வடக்கில் இன்னும் விடுவிக்கப்படாத காணிகள் எங்கள் மக்களின் சொந்தப் பரம்பரைக் காணிகள். இந்தக் காணிகளை விடுவிக்க வேண்டுமென நாம் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றோம்.

கட்டளைத் தளபதி கூறியது போன்று விடுவிக்கப்பட்ட அனைத்துக் காணிகளும் பற்றைகளாக காணப்படவில்லை. ஒருசில காணிகள் மாத்திரமே பற்றைகளாக காணப்படுகின்றன.

எனவே, எமது மக்களின் காணிகள் முழுவதும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமென மீண்டும் வலியுறுத்துகின்றோம். எமது மக்களின் காணிகள் விடுவிப்பு விவகாரம் தொடர்ந்தும் இழுத்தடிக்கப்படும் பட்சத்தில் கடந்த காலங்களைப் போன்று மக்கள் போராட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டி வருமெனவும் அவர் மேலும் எச்சரிக்கை விடுத்தார். (இ-18)

## மஹோற்சவமும் மகா சிவராத்திரியும்

(குப்பிழான்)

கீரிமலை நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 11.15 மணி முதல் நண்பகல் 12 மணி வரையுள்ள சுப வேளையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ச்சியாக 15 நாட்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவப் பெருவிழாவில் எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக் கிழமை இரவு 7 மணியளவில் சப்பறத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தேர்த் திருவிழாவும், சனிக்கிழமை அதிகாலை கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தோற்சவமும், பிற்பகல் 2 மணியளவில் யாக கும்ப அபிஷேகமும், விசேட பூஜையும், கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளன.

மஹா சிவராத்திரி நன்னாளான எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு நான்கு சாமப் பூஜையும், தம்ப பூஜையும் நடைபெற்று விசேடமாக நள்ளிரவு 12 மணியளவில் இலிங்கோற்பவ பஞ்சமுகார்ச்சனையும் அதனைத் தொடர்ந்து சோமஸ் கந்தர் இடபாரூடராக கற்பூர ஜோதியுடன் வெளிவீதி உலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. (இ-18)

## 25 ஆண்டுகளுக்கு பின் திறக்கப்பட்டது பிரதேச சபை உப அலுவலகம்




(திருமலை)

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச சபையின் ஆரம்ப காலத்தில் இருந்து இயங்கி வந்து இடைநிறுத்தப்பட்ட கோயிலடி உப அலுவலகம் 25 ஆண்டுகளுக்கு பின் மீண்டும் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

தம்பலகாமம் பிரதேச சபையின் தமிழ் உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க திறந்து வைக்கப்பட்ட இந்த உப அலுவலகத்தின் செயற்பாடுகள் 1995ஆம் ஆண்டுக்கு பின் யுத்தம் காரணமாக முள்ளிப் பொத்தானையில் உள்ள பிரதான அலுவலகத்தின் கீழ் மாற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 25 ஆண்டுகளின் பின்னர் இவ் உப அலுவலகமானது இப்பகுதியின் தமிழ் உறுப்பினர்களினதும் பொது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க திறந்து வைக்கப்பட்டது. (ஐ)

## மகாவலி எல் வலய திட்டத்திற்காக சுவீகரிக்கப்பட்ட நிலத்திற்கு மாற்றீடான நிலங்கள் வழங்கப்படும்

### நாடாளுமன்றில் பிரதமர் திட்டவட்டம்

(கொழும்பு)

மகாவலி எல் வலயத்தில் நீர்வழங்கல் திட்டத்திற்காக சுவீகரிக்கப்பட்ட நிலங்களுக்கு மாற்றீடான நிலங்கள் உரிய தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் என சபையில் அறிவித்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் இது குறித்து கலந்துரையாடத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்ட மகாவலி எல் வலயத்தில் தமிழ் மக்களின் எந்தவொரு காணியும் சிங்கள மக்களுக்கு கொடுக்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.



பாராளுமன்றத்தில் நேற்று பிரதமருக்கான கேள்வி நேரத்தில் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் முல்லைத்தீவு மாவட்ட மகாவலி எல் வலய வர்த்தமானி அறிவித்தல் குறித்து கேள்வி எழுப்பினார்.

குறிப்பாக மகாவலி எல் வலயத்தில் உள்ள தமிழர் நிலங்களை அபகரித்து அவை சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டதாகவும், குறித்த காணிகளை பிரதேச செயலகத்திற்கு ஒப்படைக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ள நிலையில் அது குறித்து எந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் இது குறித்து பிரதமர் கவனம் செலுத்தி தீர்வை பெற்றுக் கொடுக்க முடியுமா? எனக் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்து உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

## ட்ரோன் கமராக்களைப் பயன்படுத்தி காட்டு யானைகளை விரட்ட நடவடிக்கை

(புத்தளம்)

புத்தளம் மாவட்ட செயலகத்திற்குட்பட்ட நவகத்தேகம பிரதேசத்தில் அப்பகுதி மக்களுக்கு உயிர் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி வரும் காட்டு யானைகளை விரட்டும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டது.

வனஜீவராசிகள் திணைக்கள பொது முகாமையாளரின் பணிப்புரையின் கீழ் புத்தளம் வனஜீவராசிகள் பிராந்திய உதவி முகாமையாளரின் தலைமையில் புத்தளம் மாவட்ட செயலகத்திற்குட்பட்ட நவகத்தேகம பிரதேசத்தில் அப்பகுதி மக்களுக்கு உயிர் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி வரும் காட்டு யானைகளை விரட்டும் நடவடிக்கையே இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டது.

அத்துடன் 15 நாட்களுக்கு நவகத்தேகம விகாரையில் முகாம் அமைக்கப்பட்டு 15 நாட்களுக்கு தங்கியிருந்து குறித்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

புத்தளம் பிராந்திய வனஜீவராசிகள் காரியாலய அதிகாரிகள், புத்தளம் வனஜீவராசிகள் கட்டுப்பாட்டுப் பிரிவினர், கருவலகஸ்வெவ வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மற்றும் நவகத்தேகம வனஜீவராசிகள் திணைக்களத்தினர் இணைந்து செயற்பாட்டை முன்னெடுத்தனர்.

இதன்போது "ட்ரோன்" கமராக்களை இயக்குவதற்கு-பாலாவி விமானப்படையினரும் இணைக்கப்பட்டுள்ளதாக புத்தளம் பிராந்திய வனஜீவராசிகள் திணைக்கள உதவி முகாமையாளர் தெரிவித்தார்.

நவகத்தேகம காட்டுப்பகுதியில் காணப்படும் காட்டு யானைகளையே தப்போவ காட்டுப் பகுதிக்கு விரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# ரஞ்சனின் தொலைபேசி உரையாடல் ஹன்சார்ட் பிரிவில் கையளிப்பு



(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தனது தொலைபேசி உரையாடல்கள் அடங்கிய இறுவெட்டை பாராளுமன்ற ஹன்சார்ட் பிரிவில் ஒப்படைத்தார்.

கடந்த 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் பாராளுமன்ற நூலகத்தில் ஒப்படைப்பதற்காக, குறித்த இறுவெட்டு ஹன்சார்ட் பிரிவில் ஒப்படைக்கப்பட்டது. இவ்வாறு பாராளுமன்ற நூலகத்தில் கையளிக்கப்படும் விடயங்களை எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் பார்வையிடலாம்.

வெளிநபர் ஒருவர் அவற்றை அணுக வேண்டுமானால், பாராளுமன்றச் செயலாளரிடம் விசேட கோரிக்கை முன்வைத்து அதற்கமைய உரிய அனுமதியைப் பெற வேண்டும்.

ரஞ்சன் ராமநாயக்க கடந்த ஜனவரி 21 ஆம் திகதி இடம் பெற்ற பாராளுமன்ற அமர்வில் விசேட உரையாற்றியதோடு, பல்வேறு பிரபலங்களுடனான தொலைபேசி உரையாடல்களை சபையில் முன்வைப்பதாக கூறியிருந்தார்.

எனினும் அது தொர்பில் எந்த உரையாடல் பதிவுகளையும் அவர் சமர்ப்பிக்கவில்லை என, சபாநாயகர் மற்றும் பிரதிச் சபாநாயகர் ஆகியோர் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையிட்டதாக தெரிவித்து, ரஞ்சன் ராமநாயக்க கடந்த ஜனவரி 14 ஆம் திகதி கைது செய்யப்பட்டு, எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ராஜிதவையும் ரஞ்சனையும் கொரோனாவே பாதுகாத்தது

## பியல் நிஸாந்த தெரிவிப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாராளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரட்னவும் ரஞ்சன் ராமநாயக்கவும் பாதுகாக்கப்பட்டுள்ளனர். எனவே அடுத்து இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் மக்கள் இவ்வாறானவர்களை பாதுகாக்காது புறக்கணிக்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பியல் நிஸாந்த டி சில்வா தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தாக்குதலின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சன் ராமநாயக்க, ராஜித சேனாரட்ன ஆகிய இருவர் மாத்திரமே நன்மையடைந்துள்ளனர்.

இவர்களின் தலைப்பு செய்தியை இன்று கொரோனா கைப்பற்றியுள்ளது. இவ்விருவர் மீதும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை நாட்டு மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்.

பாராளுமன்றத்தின் பாரம்பரிய கோட்பாடுகளுக்கு பங்கம் விளைவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, குறுகிய அரசியல் தேவைகளுக்காக பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அரசியல் நாடகத்தை அரங்கேற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன உள்ளிட்டோர் பாதுகாக்கப்படாது புறக்கணிக்கப்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் நிச்சயம் தோற்றம் பெறும்.

ஐக்கிய தேசியக் .கட்சியை பிறர் வீழ்த்த வேண்டிய தேவை கிடையாது. கட்சிக்குள் தற்போது தோற்றம் பெற்றுள்ள முரண்பாடுகள் உக்கிரமடையும் வேளையில் அக்கட்சி தானாகவே வீழ்ச்சியடையும். பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ தலைமையில் பொதுத்தேர்தலுக்காக வகுக்கப்பட்ட திட்டங்கள் இம்மாதம் முதல் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ராஜா பிளாசா மாதிரிக்கிராமத்தை அரச பங்களிப்புடன் அமைத்த 100 வீட்டுத்திட்ட நன்கொடையாளர் இ.குவேந்திரநாதன் தம்பதியினரைக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் மண்டபத்தில் ஓய்வுநிலை அதிபர் கணிதச்சுடர் சண். வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-5)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப் பாய் கண்ணகி அம்மன் ஆலய பாலஸ் தாபன கும்பாபிஷேகம் நாளை 7 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 6.05 மணி முதல் 7.15 மணி வரையுள்ள சுப வேளையில் நடைபெறும். (இ-5)


## பெயர் மாற்றம்

லோட்டன் வீதி மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட பிலிப்ஸ் வின்ரன் இந்திராதேவி ஆகிய எனது பெயர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் ரதிதேவி என தவறாகப் பதியப்பட்டுள்ளது. எனவே இன்று முதல் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் பிலிப்ஸ் வின்ரன் இந்திராதேவி என்ற பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள
பிலிப்ஸ் வின்ரன் இந்திராதேவி

(2037)

## கம்சப்பிரியா இசைக்கல்லூரி

தைப்பூசணநாள் வகுப்பு (மாலை 4.00-6.00 மணிவரை) புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.
(வீணை, வயலின், புல்லாங்குழல், ஹார்மோனியம், வாய்ப்பாட்டு, வய்லின், கிற்றார் போன்ற அனைத்து இசைக் கருவிகளும் கற்பிக்கப்படுகின்றன.

இல.30, கிருஷ்ணபிள்ளை வீதி,
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (1844) ஆசிரியர்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



## நயினையில் தைப்பூச விழா அமுதசுரபியில் அன்னதானம்

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் தைப்பூசத்திருவிழா 08.02.2020 சனிக்கிழமை நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. பகல் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று அம்பிகை அழகிய திருமஞ்சத்தில் வீதியுலாவரும் அருங்காட்சி இடம்பெறும். இத்திருநாளில் நயினாதீவுக்கு வருகைதரும் அடியார்கள் அனைவருக்கும் ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையினர் மதியம் 11 மணிமுதல் அன்னதானம் வழங்க சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளனர் என்பதை மகிழ்வுடன் அடியார்களுக்கு அறியத்தருகிறோம்.

குழந்தைகளின் நன்மைகருதி காலை 7.00-9.00 மணிவரை காலை ஆகாரமும் வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகிறோம்.

வணக்கம்

நயினாதீவு, 2
தொ.பே.021 321 3575

நிர்வாகம்
ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி
அன்னதான சபை

(2044)

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா: 19 ¾ செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Diploma, Finland<br>எதிர்பார்ப்பு: சைவபோசணம்<br>தொ.இ: B/10455 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா: 20 ½ செவ் 7 இல்<br>உயரம்: 163cm<br>தகைமை/தொழில்: A/L, தனியார்தொழில்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: G/10485 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா: 17 ½<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA, Accounting & Finance, UK<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10456 | பிறப்பு: 1993 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: பரணி 1<br>கி.பா: 82 சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும். இந்து சமயத்தவர்களும் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/ 10487 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மகம் 3 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA, அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசணம், படித்த பெண்<br>தொ.இ: B/10458 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: HNDE.<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்<br>தொ.இ: G/10490 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: 32 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசணம்<br>தொ.இ: B/10461 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>கி.பா: 68 ½ செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BBM பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: அரச தனியார்தொழில்<br>தொ.இ: G/10491 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# மகிந்த அரசு தமிழர்களை காணாமல் ஆக்கியதற்கு விமல் வீரவன்ச சாட்சி

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு

(நெளுக்குளம்)


மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் தமிழர்கள் வகை தொகையின்றி காணாமல் ஆக்கப்பட்டனர் என்பதற்கு விமல் வீரவன்சவே சாட்சி என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் காணாமல் போனவர்களை மண்ணுக்குள் தோண்டி பார்க்குமாறு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்திருந்த கருத்து தொடர்பில் அவர் வெளி யிட்டுள்ள செய்திக்குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களின் ஆறாத வடுவாக உள்ள காணாமால் ஆக்கப்பட்டோர் விடயத்திற்கு தீர்வு காணாமல் தொடர்ந்துவரும் அரசாங்கங்கள் ஏமாற்றி வருகின்றது.

இந் நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வீதியோரங்களில் இன்றும் வலிகளை சுமந்து கண்ணீர் மல்க போராட்டங்களை நடத்தி வருகின்றனர். தமது பிள்ளைகள் . என்றோ ஒரு நாள் தம்மிடம் வந்து சேராதா என்ற ஏக்கத்துடனேயே அந்த தேடலில் அவர்கள் ஈடு பட்டுள்ளனர்.



இவ்வாறான உறவுகளை புல னாய்வு விசாரணைகள் என்றும் சந்தேகப்பார்வையுடனும் பல் வேறு துன்பங்களை கொடுத்து வரும் அரசு தற்போது வெந்த புண்ணில் வேலைப்பாய்ச்சுவது போல் காணாமல் போனோரை மண்ணுக்குள் தோண்டிப் பார்க் குமாறு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த அமைச்சரான விமல் வீரவன்சவின் இக்கருத்தானது அரசாங்கத்தின் கருத்தாகவே பார்க்க முடிகின்றது.

மகிந்த ஆட்சிக்காலத்தில் போர் முடிவுக்கு வந்தபோது வட்டுவாகல் பாலத்திலும் ஓமந்தை இராணுவ சோதனை சாவடியிலும் நலன்புரி முகாம்களிலும் வைத்திய சாலைகளிலும் வைத்து காணாமல் ஆக்கப்பட்டோரையே இந்த உறவு கள் தேடி அலையும் போது இவ் வாறான கருத்தை விமல் வீர வன்ச தெரிவித்துள்ளமையானது அரசாங்கத்தின் உண்மை முக த்தை காட்டியுள்ளது.

எனவே மகிந்த ஆட்சிக்கா லத்தில் காணாமல் ஆக்கப்பட் டோருக்கு என்ன நடந்தது என்பதனை தனது வாக்கு மூலமாக விமல் வீரவன்ச தெரிவித்துள்ள மையினால் அவரை உடன் கைது செய்து விசாரணைகளை முன் னெடுக்க வேண்டும் என்பதுடன் இவ்விடயம் தொடர்பில் சர்வதேசமும் கவனம் செலுத்த வேண் டியதுடன் அடுத்து வரும் ஜெனீவா மனித உரிமை பேரவை மாநாட்டில் விமல் வீரவன்சவின் கருத்தினை அவதானத்திற்கு கொண்டு செல்ல நாம் நடவடிக்கை எடுப்போம் எனவும் மேலும் தெரிவித்துள்ளார். (9-299)




# முல்லை.வன திணைக்களத்தால் 13 இலட்சம் ரூ.பெறுமதியிலான மரக்கடத்தல் முறியடிப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வனவள திணைக்களத்தால் கடந்த ஒரு மாத காலப்பகுதியில் 13 இலட்சம் ரூபா பெறுமதியிலான சட்டவிரோதமாக வெட்டிச் செல்லப்பட்ட மரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு வட்டார வன அதிகாரி து.கௌதமன் தெரிவித்துள்ளார் .

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு வனப்பகுதிகளிலிருந்து சட்டவிரோதமான முறையில் வெட்டி கடத்தி செல்லப்பட்ட மரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் முல்லைத்தீவு வள்ளிபுனம் காட்டுப் பகுதியிலிருந்து சட்டவிரோதமாக வெட்டிச் செல்லப்பட்ட 1 1/2 இலட்சம் ரூபா பெறுமதியிலான பாலை மரக்குற்றிகளுடன் வாகனம் ஒன்று பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதன்போது மரம் கடத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ள நிலையில் வாகனத்திலிருந்து ஒரு இலட்சத்து 32ஆயிரத்து 500 ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது .

இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் இன்றையநாள் வரையான காலப்பகுதியில் 17 வாகனங்களுடன் . 13 இலட்சம் ரூபா பெறுமதியிலான மரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ள நிலையில் 7 வழக்குகள் நேற்று வரையிலான நாட்களில் நிறைவடைந்துள்ளன. இந்த வழக்கு களுக்காக இர ண்டு இலட்சம் ரூபா தண்டமும் விதிக கப்பட்டுள்ளது.

குறைந்தளவான ஆளணி வளங்களுடன் முல்லைத்தீவு வன திணைக்களம் இயங்குகின்ற போதிலும் பல சிரமங்களுக்கு மத்தியில் சட்டவிரோத மரக்கடத்தல் முறியடிக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார் (9)

# சட்டவிரோத மண் அகழ்வினால் குளங்களுக்கு பெரும் ஆபத்து

## கிளி/ நீர்ப்பாசன திணைக்களம் தெரிவிப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடு. வன்னேரிக்குளம் ஆகிய பகுதிகளில் தொடர்கின்ற மணல் அகழ்வினால் குளங்களுக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் த.இராஜகோபு தெரிவித்தார்.

இரணைமடுக் குளத்தின் ஆற்றுப்படுகைகளில் தொடர்கின்ற மணல் அகழ்வினால் குளத்தின் கீழான கட்டுமானங்கள் அழிவடைந்து செல்கின்றன.

நீர்ப்பாசனத் திணைக்களம் பொலிஸாரின் உதவியுடன் இதனைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட போது மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களின் பல உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன. இரணைமடுக்குளத்தின் நீர் பரவாமல் அமைக்கப்பட்ட அணைகள் பல இடங்களில் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளன.

இதேவேளை வன்னேரிக் குளத்தின் தென் பகுதியில் நடைபெறுகின்ற மணல் அகழ்வினால் வன்னேரிக் குளத்திற்கு வருகின்ற நீர் திரும்பிச் செல்கின்றது எனவும் தெரிவித்ததுடன் கனிய வளத் திணைக்களம் மணல் அனுமதிகளை வழங்குகின்ற போது நீர்ப்பாசனத் திணைக் களத்தின் அனுமதிகளை பெற்றுக் கொள்வதில்லை.

இதன் காரணமாகவே மணல் அகழ்வில் ஈடுபடுகின்றவர்கள் குளங்களின் கீழான பல இடங்களில் மணல் அகழ்வில் ஈடுபடுகின்றார்கள். இனிவருங் காலங்களில் நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் மணல் அகழ்விற்கான அனுமதிகளை பெற்றுக் கொள்ள வேண்டும். குளங்களின் கீழான மணல் அகழ்வுகள் தொடருமானால் மாவட்டத்தின் எதிர்கால நீர்ப்பாசனம் கேள்விக்குறியாகும் எனவும் தெரிவித்தார். (9-350)

# உடையார்கட்டு குளத்தின் கீழான ஆற்றுப்பகுதியை துப்புரவு செய்யுமாறு விவசாயிகள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு உடையார் கட்டுக்குளத்தின் கீழான ஆற்றுப்பகுதியினைத் துப்புரவு செய்யுமாறு நீர்ப்பாசனத் திணைக் களத்திடம் அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக குறித்த ஆறு துப்புரவு செய்யப் படாததன் காரணமாக மழை காலத்தில் வெள்ளம் வயல் நிலங்களை மூடிப் பாய்வதன் காரணமாக நெற்செய்கை பாதிக்கப்படுகின்றன.

குறித்த விடயம் தொடர்பாக கடந்த பத்தாண்டுகளாக அமைச்சர்கள். பாராளுமன்ற உறுப் பினர்கள், அதிகாரிகளிடமும் முறைப்



பாடுகள் செய்யப்பட்டும் நடவடிக் கைகள் எடுக்கப்படவில்லை.

இதன் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். புதுக்குடியிருப்பு பிரதேச ஒருங் கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் இவ்விடயம் பல தடவைகள் ஆராயப்பட்ட போதிலும் நடவடிக் கைகள் எடுக்கப்படவில்லை. குளத்தின் கீழான ஆற்றுப்பகுதியினைத் துப்புரவு செய்வதன் மூலம் மழை வெள்ளம் கடலினைச் சென்றடையும். தற்போது ஆற்றில் தடைகள் காணப்படுவதன் காரணமாக மழை வெள் ளம் மக்கள் குடிமனைகளுக்குள்ளும் வயல் நிலங்களை மூடியே பாய்வதாக விவசாயிகள் தெரிவிக் கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள இந்த உடையார்கட்டுக் குளம் மாவட்டத்தின் முக்கிய குளங்களில் ஒன்றாக இருப்பது குறிப்பிடத்தக்கது. (9-350)

# சிவில் குழுக்கள் செயலிழந்துள்ளதால் குற்றச் செயல்கள் அதிகரிப்பு

## பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டு

(அக்கராயன்)

கிராமங்களில் உள்ள சிவில் குழுக்கள் செயலிழந்துள்ளதால் குற்றச் செயல்கள் அதிகரிக்கின் றன என கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டம் ஒழுங்கு கூட்டம் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்றது. அதன் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரத்தில் முக் கிய இடங்களில் போக்குவரத்து பொலிஸார் பணியில் ஈடுபட்டுள்ளனர். சாதாரண பொது மக்கள் தலைக்கவசம் அணியாது விட் டால் தண்டம் விதிக்கும் பொலிஸார் பெரும் ஒலி எழுப்பியவாறு தலைக்கவசம் அணியாமல் மிக வேகத்தில் மோட்டார் சைக்கிள் களில் செல்பவர்களை ஏன் கைது செய்வதில்லை எனக் கேள்வி எழுப்பியதுடன் கிளிநொச்சி மாவட்டத்திலே கிராமங்களில் உள்ள பொலிஸ் சிவில் குழுக்கள் செய லிழந்து காணப்படுவதன் காரணமாகவே குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளதாகவும் இக்குழுக் களை பலப்படுத்துவதன் மூலம் குற்றச் செயல்களைக் குறைக்க முடியும் எனவும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. (9-350)

# மன்னாரில் நெல் கொள்வனவு



(மன்னார்)

அரசாங்கத்தின் புதிய நெல் கொள்வனவு விலைக்கு அமைவாக நேற்று மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவு செய்யப்பட்டது.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன் மாந்தை வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைமைச் செயலகத்தில் பொது முகாமையாளர் ரி.ஜேம்ஸ் தலைமையில் நெல் கொள்வனவு இடம்பெற்றது.

குறித்த நெல் கொள்வனவினை மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது காய வைத்த நெல் ஒரு கிலோ 50 ரூபாய் வீதம் 70 கிலோ அடங்கிய ஒரு மூடை 3500 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டது.

இதன்போது மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அதிகளவான விவசாயிகள் தமது நெல்லை உரிய விலைக்கு விற்பனை செய்தனர்.

ஆரம்ப நாளான நேற்று சுமார் 5 ஆயிரம் கிலோ நெல்லினை மாந்தை வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் கொள்வனவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-285)

# கால்நடைகளை கட்டவும்

## கிளி.கமநலசேவை நிலையம் அறிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழான காலபோக நெற்செய்கை அறுவடை நிறைவு பெறுவதற்கு முன்னரே கால்நடைகள் கட்டக்காலிகளாக விடப்பட்டுள்ளன என்றும் இவற்றை அதன் உரிமையாளர்கள் எதிர்வரும் 20ஆம் திகதி வரை கட்டிப் பராமரிக்க வேண்டும்என கமநலசேவை நிலையம் அறிவித்துள்ளது.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழான காலபோக செய்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் நெல் அறுவடை இயந்திரங்களுக்கான தட்டுப்பாடு நெல்லை சந்தைப்படுத்துவதில் உள்ள நெருக்கடிகள் காரணமாக அறுவடைகளில் தாமதங்கள் காணப்படுகின்றன. இதனால் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் காலபோக பயிர்செய்கைக்கூட்டத் தீர்மானத்திற்கு அமைவாக கால்நடைக் கட்டுப்பாட்டுத்திகதி நிறைவடைவதற்கு முன்னரே கால்நடைகள் கட்டாக்காலிகளாக விடப்பட்டுள்ளதுடன் இவ்வாறு விடப்பட்டுள்ள கால்நடைகள் தொடர்ந்தும் பாரிய அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன. இதனால் விவசாயிகள் பெரிதும் நட்டத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பில் கமநலசேவை நிலையத்தினால் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அதாவது இரணைமடுக்குளத்தின் கீழான காலபோக செய்கையின் அறுவடை முழுமை பெறாத காரணத்தினால் இவ்வாறு கட்டாக்காலிகளாக விடப்படும் கால்நடைகளால் பெரும் பயிரழிவுகள் ஏற்படுத்தப்படுகின்றன.

எனவே காலபோகப் பயிர்ச்செய்கை கூட்டத் தீர்மானத்திற்கு அமைவாக எதிர்வரும் 20 ஆம் திகதி வரை கால்நடைப்பண்ணையாளர்கள் தமது கால் நடைகளைக் கட்டிப் பராமரிக்குமாறும் அவ்வாறு பராமரிக்கத்தவறி கட்டாக் காலிகளாக திரியும் கால்நடைகள் கால்நடை பிடிப்போரால் பிடிக்கப்பட்டு பயிரழிவு தண்டப் பணம் என்பன அறவிடப்பட்டதன் பின்னரே அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (9-315)



# மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு

(நெளுக்குளம்)

மாவீரன் பண்டாரவன்னியன் மறுமலர்ச்சி மன்றத்தால் வவுனியா மாவட்டத்தில் உயர்தர பரீட்சையில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களிற்கான கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் பெப்ரவரி 29ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

மன்றத்தின் தலைவர் மா.கதிர்காமராஜா தலைமையில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதன் போது வவுனியா மாவட்டத்தில் உயர்தர பரீட்சையில் புதிய மற்றும் பழைய பாடத்தில் அனைத்து பிரிவில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

வருடாந்தம் இம்மன்றத்தினால் உயர்தரம் மற்றும் க.பொ.த. சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களிற்கு கௌரவமளிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (9-299)

# விமல் வீரவன்ச மனநோயாளி

## சிறீதரன் எம்.பி.தெரிவிப்பு



(கண்டாவளை)

விமல் வீரவன்ச ஒரு நவீன மனநோயாளி எனத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கட்டைக்காடு கேவில் பகுதி மக்களுடனான சந்திப்பில் நேற்று முன்தினம் கலந்து கொண்டார். அவரிடம் விமல் வீரவன்ச காணாமல் ஆக்கப்பட்டவர்களை மண்ணுக்குள் தோண்டி தேடுங்கள் என்று கூறியுள்ளார்.

எனவே இந்த அரசாங்கம் தாங்கள் புதைத்த இடத்தைக் காட்ட வேண்டும் எனத் தெரிவித்தனர். அதற்கு பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் இந்த நாட்டின் ஜனாதிபதி தொடக்கம் அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் அனைவரும் தமிழர்களை கொடூர வெறியுடனே பார்க்கின்றனர்.

தமிழர்களின் இரத்தங்களைக்குடிக்க காத்துக்கொண்டிருப்பது போன்றும் அவர்களின் செயற்பாடுகள் அமைந்து கொண்டிருப்பதுடன் வீமல் வீரவன்ச ஒரு நவீன மனநோயாளி. இந்த அரசு தமிழர்களை அடக்கி ஆளவும் ஒடுக்கி ஆளவும் தொடர்ந்து முயற்சிக்கிறது.

சிங்களத்தலைவர்கள் கடந்த கால படிப்பினைகளில் இருந்தும் பாடங்களைக் கற்றுக்கொள்ளவில்லை. எமது உரிமைகளைத்தர மறுத்த போதுதான் தமிழர்கள் போராடினார்க்ள் என மேலும் தெரிவித்தார். (9-315)

# 26 போத்தல்கள் கசிப்புடன் மூவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு, வட்டக்கச்சி, தருமபுரம் போன்ற இடங்களில் நேற்று முன்தினம் மேற்கொண்ட தேடுதலின் போது 26 போத்தல் கசிப்புடன் 3 பேர் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் இரணைமடு பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் அகழ்வில் ஈடுபட்டவரை கைது செய்ய முற்பட்டபோது அவர் தப்பிச் சென்றதால் அவர் பயன்படுத்திய உழவு இயந்திரத்தை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேற்படி இரு சம்பவங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் நடவடிக்கைகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (9-316)



முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கூழாமுறிப்பு கிராமத்தில் வசித்து வருகின்ற இராசேந்திரம் சதீஷ் என்பவர் சிறுநீரக நோயினால் நீண்டகாலமாக பாதிக்கப்பட்டிருந்த நிலையில் அவரது சிகிச்சைக்காக புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் பண்டாரவன்னி வட்டார உறுப்பினர் கி.சந்திரரூபன் தனது சொந்த நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபா நிதியை நேற்று முன்தினம் வழங்கியுள்ளார்.

(படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# கிளிநொச்சி மாவட்டத்தில் கள் விற்பனை வீழ்ச்சி

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்துள்ள சட்டவிரோத மது உற்பத்தி காரணமாக கள் விற்பனையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் பாதிக்கப்பட்டவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி சட்டம் ஒழுங்கினைப் பேணுகின்ற கூட்டத்தில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்குகின்ற கள்ளுத் தவறணைகளில் கடந்த காலங்களில் நாளொன்றிற்கு ஐந்நூறு போத்தல் கள் விற்பனை நடைபெற்ற நிலையில் தற்போது நூறு போத்தல் கள்ளுக் கூட தவறணைகளில் விற்பனை செய்யப்படுவதில்லை எனவும் ஒரு போத்தல் கள் 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் நிலையில் கசிப்பு பைகளில் கட்டப்பட்டு 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதன் காரணமாக கள் விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளது.

தவறணைகளுக்கு அருகில் கசிப்பு விற்பனை அதிகரித்துள்ளதால் தவறணைகளில் கள் விற்பனை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-350)

# முல்லைத்தீவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ள ஆறு பாரிய நீர்ப்பாசனக் குளங்கள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆறு பாரிய நீர்ப்பாசனக்குளங்கள் ஐ.டபிள்யூ.ஆர்.எம்.பி.திட்டத்தின் கீழ் ஆயிரத்து 760 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்துஐயன்கட்டுக்குளம், வவுனிக்குளம் உள்ளிட்ட பாரிய நீர்ப்பாசனக்குளங்கள் உள்ளடங்கிய வகையில் சுமார் 20 வரையான பாரிய மற்றும் நடுத்தரக்குளங்கள் நீர்ப்பாசனத்திணைக்களத்தினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இதில் கூடுதலான குளங்கள் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய நிலையில் காணப்படுகின்றன.


இந்தநிலையில் மேற்படி திட்டத்தின் கீழ் ஆறு குளங்கள் சுமார் ஆயிரத்து 760 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது முத்துஐயன்கட்டுக் குளத்தின் கீழ் 14 வேலைத்திட்டங்கள் 980 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளம் காரணமாக உடைப்பெடுத்த நித்தகைக்குளத்தின் புனரமைப்பு பணிகள் 300 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதேபோன்று அண்மையில் பெய்த மழை காரணமாக உடைப்பெடுத்த மருதன்குளம் 125 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

அத்துடன், மல்லாவிக் குளத்தின் அபிவிருத்திப்பணிகள் 125 மில்லியன் ரூபாவிலும் தென்னியன்குளம் 125 மில்லியன் ரூபாவிலும் தேறாங்கண்டல் குளம் 105 மில்லியன் ரூபாவிலும் என ஆயிரத்து 760 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)

# பாரதம்

## அயோத்தியில் ராமர் கோவில் கட்ட திட்டம் தயார் - பிரதமர் மோடி



(டில்லி)

அயோத்தியில் ராமர் கோவில் கட்ட அறக்கட்டளை அமைக்கப்பட்டதாகவும் கோவில் கட்ட திட்டமும் தயாராக உள்ளதாகவும் மக்களவையில் பிரதமர் மோடி நேற்று தெரிவித்தார்.

அயோத்தி ராமர் கோவில் தொடர்பாக உச்ச நீதிமன்றம் வழங்கிய இறுதித் தீர்ப்பில் சர்சைக்குரிய 2.77 ஏக்கர் நிலத்தில் ராமர் கோவில் கட்டலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

முஸ்லிம்கள் மசூதி கட்டுவதற்காக தனியாக 5 ஏக்கர் நிலத்தை வழங்க வேண்டும் என்றும் அதே தீர்ப்பில் தெரிவித்திருந்தனர்.

மேலும், ராமர் கோவில் கட்டுவதற்காக அறக்கட்டளை ஒன்றை மத்திய அரசு 3 மாதத்திற்குள் உருவாக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் நிபந்தனை விதித்தது.

நீதிமன்றம் விதித்த காலக்கெடு எதிர்வரும் 9 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில் ராமர் கோவில் கட்ட அறக்கட்டளை அமைக்கப்பட்டதாக பிரதமர் மோடி நேற்று தெரிவித்தார்.

இது குறித்து மக்களவையில் அவர் தெரிவித்ததாவது,

"அயோத்தியில் ராமர் கோவில் கட்ட திட்டம் தயாராக உள்ளது. இந்தப் பணிக்காக "ஸ்ரீராம ஜென்ம பூமி திரத் ஷேத்ரா" என்ற அறக்கட்டளை உருவாக்கப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றின் வழிகாட்டுதலின் படி இந்த சிறப்புமிக்க முடிவை அறிவிப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சிகரமாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

## மலேசிய மசகு எண்ணெய் நிறுத்தியது இந்தியா வாங்குகிறது பாகிஸ்தான்

(கோலாலம்பூர்)

மலேசியாவிடமிருந்து மசகு எண்ணெய் வாங்குவதை இந்தியா நிறுத்தியதால் அதனை பாகிஸ்தான் ஈடு செய்யும் என்று இம்ரான் கான் தெரிவித்தார்.

மலேசியாவுக்கு இரண்டு நாள் சுற்றுப்பயணம் சென்றுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான். மலேசியப் பிரதமர் மகதீர் முகமதுடன் கூட்டாகச் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

மசகு எண்ணெய் வாங்குவதை இந்தியா நிறுத்தியது குறித்து இம்ரான் கான் தெரிவிக்கும்போது, "காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தானுக்கு ஆதரவளித்ததற்காக மலேசியாவை இந்தியா மிரட்டியதை நாங்கள் கவனித்தோம். மசகு எண்ணெய் வாங்குவதை நிறுத்தி இந்தியா மலேசியாவை அச்சுறுத்துகிறது.

மலேசியாவிடமிருந்து மசகு எண்ணெய் வாங்குவதை இந்தியா நிறுத்தியதால் அதனை பாகிஸ்தான் ஈடு செய்யும்" என்று தெரிவித்தார்.

முன்னதாக, குடியுரிமைச் சட்டத்துக்கு எதிராக இந்தியாவின் பல இடங்களில் போராட்டம் நீடித்து வருகிறது. இந்த நிலையில் இந்தியாவின் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை மலேசியப் பிரதமர் மகாதீர் முகமது விமர்சித்தார்.

கச்சாய் எண்ணெய் இறக்குமதி குறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்காத நிலையில் இந்திய நிறுவனங்கள் அதையும் இறக்குமதி செய்ய முன்வரவில்லை.

மலேசியாவுக்குப் பதிலாக இந்தோனேசியாவிலிருந்து கூடுதல் விலைக்கு இறக்குமதி செய்யத் ஆரம்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## அமெரிக்காவிடம் உதவி கேட்க கௌரவம் பார்க்கும் ஈரான்

(வோஷிங்டன்)

குறுகிய காலத்திற்குள் ஈரானின் பொருளாதாரத்தை மேம்படுத்த அமெரிக்காவால் உதவ முடியும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறியுள்ளார்.

அமெரிக்கா- ஈரான் இடையேயான மோதல்கள் குறித்து அனைவரும் அறிந்ததே. அணு ஆயுத தவிர்ப்பு விவகாரம், யுரேனியம் செறிவூட்டல், பொருளாதார தடைகள் போன்ற பல விவகாரங்கள் காரணமாக இரு நாடுகளிடையே அசாதாரண சூழல் நிலவி வருகிறது.

இதையடுத்து, இரு நாட்டு ஜனாதிபதிகளும் முக்கிய தலைவர்களும் தங்களது நாட்டின் இராணுவ பலத்தை குறித்தும் தாக்குதல் நடத்தினால் பதிலடி கொடுக்கப்படும் எனவும் ஒருவருக்கொருவர் எச்சரிக்கை விடுத்து வந்தனர். இந்நிலையில், குறுகிய காலத்திற்குள் ஈரானின் பொருளாதாரத்தை மேம்படுத்த அமெரிக்காவால் உதவ முடியும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறியுள்ளார்.

'எங்களது பொருளாதார தடைகளினால் ஈரான் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது. மிக குறுகிய காலத்திற்குள், மிகச் சிறந்த முறையில் அவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்த அமெரிக்காவால் உதவ முடியும். ஆனால் உதவி கேட்பதற்கு ஈரான் மிகவும் கௌரவம் பார்ப்பது போல் தெரிகிறது' என ட்ரம்ப் கூறியுள்ளார். (ஜ-2)

## கொரோனா வை உயிரிழப்பு 490

(பீஜிங்)

சீனாவில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 490 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை உலகளாவிய ரீதியில் 23 ஆயிரத்து 865 பேருக்கு கொரோனா வைரஸ் தாக்கம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 23 ஆயிரத்து 214 பேருக்கு கொரோனா வைரஸின் தொற்று ஏற்பட்டிருக்கலாமெனவும் சந்தேகம் வெளியிடப்பட்டது. இதுவரை 25 நாடுகளில் கொரோனா வைரஸின் பாதிப்பு உணரப்பட்டுள்ளது.

இந்நிலையில், உலகளாவிய ரீதியில் அந்த வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களில் சுமார் 800 பேர் குணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜப்பானில் பயணிகள் கப்பலொன்றில் பயணிக்கும் 10 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டது.

அந்தக் கப்பலில் பயணிக்கும் ஏராளமானோருக்கு கொரோனா வைரஸ்



## கென்யாவின் முன்னாள் ஜ

### தேசிய துக்கதின

(நைரோபி)

24 ஆண்டுகளாக நாட்டை ஆண்ட கென்யாவின் முன்னாள் ஜனாதிபதி டானியல் அரப் மோய் தனது 95 ஆவது வயதில் காலமானதாக ஜனாதிபதி உகுரு கென்யாட்டா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அறிவித்தார்.

கடந்த சில நாட்களாக உடல் நலக் குறைவு காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அரப் மோய், உயிரிழந்த செய்தியை அவரது குடும்பத்தினரும் உறுதிப்படுத்தினர்.

அரப் மோய் மறைவு குறித்து ஜனாதிபதி உகுரு கென்யட்டா தெரிவிக்கையில், "எமது அரசும் எமது கண்டமும் மறைந்த டேனியல் அரப் மோய்யால் ஆசிர்வதிக்கப்பட்டன. அவர் வாழ்நாள் முழுவதும் கென்யாவுக்காக சேவை புரிந்தார்" என்று தெரிவித்தார்.

மேலும், அரப் மோய் காலமானதையிட்டு இறுதிச் சடங்கு நடைபெறும் வரை தேசிய துக்க தினம் அறிவிக்கப்படுவதாகவும் அனைத்து அலுவலகங்களிலும் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட வேண்டும் என்றும் அவர் அறிவித்தார்.

கென்யாவின் ஜனாதிபதியாக 1978 ஆம் ஆண்டு பதவியேற்ற அரப் மோய் 2002 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து பதவியில் இருந்தார்.



## கொரோனா வைரஸ் தா ஆயிரக்கணக்கான செல்ல

(பீஜிங்)

சீனாவின் கொரோனா வைரஸ் தாக்கத்திற்குள்ளான பகுதியான வுஹானில் கைவிடப்பட்ட நிலையில் ஆயிரக்கணக்கான செல்லப் பிராணிகள் பசியால் வீதிகளில் சுற்றித் திரிவதாக அந்நாட்டு விலங்குகள் மீட்புக் குழுவினர் தெரிவித்தனர். மேலும் விலங்குகளால் நோய்கள் பரவக்கூடுமென எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் பிரதானமாக நாய்கள் மற்றும் பூனைகள் போன்ற விலங்குகள் வீதிகளில் அதிகளவில் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதாக விலங்குகளைப் பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

அதேவேளை கொரோனா வைரஸ் தாக்கத்திற்குள்ளான வுஹானில் இருந்து சுமார் 5 மில்லியன் மக்கள் தமது இருப்பிடத்தைவிட்டு வெளியேறினர்.

இந்நிலையில் சேகரிக்கப்பட்ட புள்ளிவிபரங்களின் அடிப்படையில் வீதிகளில் கைவிடப்பட்ட சுமார் 50 ஆயிரம் செல்லப்பிராணிகள் பசி, பட்டினியால் வீதிகளில் அலைந்து திரிவதாக சுட்டிக் காட்டப்பட்டது.

எனினும் இதுவரையில் 1000 செல்லப் பிராணிகளை பசி, பட்டினிகளில் இருந்து காப்பாற்றியுள்ளதாகவும் இந்த அமைப்பு மேலும் தெரிவித்தது. (ஜ-2)



# வெளிநாடு



# வைரஸ் தாக்கம்
# 0 ஆக அதிகரிப்பு



தொற்று ஏற்பட்டிருக்கலாமென அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, குறித்த கப்பலிலிருந்து தொற்று நோய் உறுதி செய்யப்பட்ட 10 பயணிகளும் தரைக்குக் கொண்டு வரப்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுநோயைக் கட்டுப்படுத்தும் பணிகளில், ஜப்பானிய அரச அமைப்புகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் ஆதரவுக்கு சீனா நன்றி தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள சீனாவுக்கு, ஜப்பானிய அரச அமைப்புகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களால் முகக்கவச உறைகள், பாதுகாப்பு ஆடைகள் மற்றும் கண்ணுக்கான கவசங்கள் ஆகியன வழங்கப்பட்டிருந்தன.

சீனா நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள இந் நிலையில், ஜப்பான் வெளிப்படுத்திய இந்தப் புரிந்துணர்வினை, சீனா பாராட்டியுள்ளதுடன் அதற்காக நன்றியையும் தெரிவித்துள்ளது. (ஐ-2)

# சிரியாவில் இரு மாதங்களில் 50,000 பேர் வெளியேற்றம்

## ஐ.நா.அதிர்ச்சித் தகவல்



(டமாஸ்கஸ்)

சிரியாவின் வடகிழக்குப் பகுதியில் நடக்கும் சண்டை காரணமாக கடந்த இரு மாதங்களில் சுமார் 50 ஆயிரம் பேர் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை தகவல் வழங்கியது.

இது குறித்து ஐக்கிய நாடுகள் சபை தரப்பில், "சிரியாவில் போர் நடக்கும் வடகிழக்குப் பகுதியில் உள்ள கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டைத் தளர்த்த சிரிய அரசுப் படைகள் ரஷ்யப் படைகளுடன் இணைந்து நடத்திய தாக்குதலில் கடந்த 2 மாதங்களில் 50ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மேலும் அங்கு மனிதாபிமான நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


சிரியாவில் ஜனாதிபதி பசாத்துக்கும், ஐ.எஸ்.பயங்கரவாதிகளுக்கும் இடையே கடந்த ஆறு ஆண்டுகளாக நடந்து வரும் சண்டை இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது.

ஐ.எஸ்.பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சிரியாவின் பல்வேறு பகுதிகள் அரசு கூட்டுப் படைகளால் மீட்கப்பட்டு விட்டன. இந்நிலையில் கிளர்ச்சியாளர்களின் பிடியில் உள்ள கடைசி இடமான இட்லிப்பில் இறுதிப்போர் நடைபெற்று வருகிறது.

சிரியப் போரில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். இலட்சக்கணக்கான மக்கள் துருக்கி போன்ற அயல் நாடுகளுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்தனர். (ஐ-2)

# ள் ஜனாதிபதி காலமானார்

## தினம் அறிவிப்பு



மோய் தனது ஆட்சிக் காலத்தில் கென்யாவில் வறுமை அதிகரித்தற்காக கடுமையாக விமர்சிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# முஷாரப்பின் மரண தண்டனை இரத்து; உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்பிற்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை இரத்துச் செய்யப்பட்டதை எதிர்த்து அந்நாட்டு உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவர் வழக்குத்தாக்கல் செய்தார்.



சட்டத்தரணி ஹமித்கான் லாகூர் என்பவரே இவ்வாறு உயர் நீதிமன்றம் இரத்துச் செய்த தீர்ப்பை நிராகரிக்குமாறு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார்.

சுமார் 6 ஆண்டுகள் நடைபெற்ற தேசத்துரோக வழக்கின் முடிவில் கடந்த டிசெம்பர் 17 ஆம் திகதி பாகிஸ்தான் சிறப்பு நீதிமன்றம் முஷாரப்புக்கு மரண தண்டனை விதித்தது.

நவம்பர் 2007 இல் அரசியல் சட்டத்துக்கு விரோதமாக அவசர காலநிலைப் பிரகடனம் செய்ததாக முஷாரப் மீது நவாஸ் ஷெரிப் தலைமையிலான அரசு வழக்குத் தொடர்ந்தது.

இந்த வழக்கில்தான் முஷாரப்புக்கு சிறப்பு நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

இந்த வழக்கு லாகூர் உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீட்டு விசாரணைக்கு வந்தபோது ஜனவரி 13 ஆம் திகதி சிறப்பு நீதிமன்ற உருவாக்கமே அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்று கூறி முஷாரப் மரண தண்டனை தீர்ப்பை இரத்துச் செய்து உத்தரவிட்டது.

இந்நிலையிலேயே இதனை எதிர்த்து குறித்த சட்டத்தரணி மனுத்தாக்கல் செய்தார். அவர் தாக்கல் செய்த மனுவில், "லாகூர் உயர் நீதிமன்றம் மரண தண்டனையை இரத்துச் செய்ததன் மூலம் அரசியல் சட்டப் பிரிவு 6ஐ செல்லுபடியாகாததாகச் செய்து விட்டது.

இதற்கு பாகிஸ்தான் அரசியல் சாசன வரலாற்றில் முக்கியத்துவம் உள்ளது" என்று கூறினார்.

லாகூர் உயர் நீதிமன்றம் தனது மரண தண்டனை இரத்து உத்தரவில் கூறும்போது, "1976 ஆம் ஆண்டு சிறப்பு நீதிமன்ற குற்றச்சட்டத் திருத்தத்தின் படி அரசியல் சட்டத்துக்கு விரோதமான வகையில் சிறப்பு நீதிமன்ற உருவாக்கம் நடந்துள்ளது.

அரசியல் சட்டம் 6 ஆம் பிரிவு என்பதற்குத் திருத்தம் அளித்து. அதன் மூலமாக அதற்கு முன்பாக நடந்த ஒன்றை தேசத்துரோகம் என்று கூற முடியாது" என்று கூறி மரண தண்டனையை இரத்துச் செய்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# தாக்கத்தின் எதிரொலி; செல்லப்பிராணிகள் வீதிகளில்

## விலங்குகள் மீட்புக் குழுவினர் கவலை



# புற்றுநோய் பாதிப்பு இரு தசாப்தங்களில் 60 சதவீதத்தால் அதிகரிக்கும் அபாயம்

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

(கொழும்பு)

புகைத்தல், கல்லீரல் அழற்சி மற்றும் எச்.பி.வி.வைரஸ் தொற்று என்பவற்றைக் குறைக்க உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர்வரும் இரு தசாப்த காலப் பகுதியில் புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களின் தொகை 60 சதவீதத்தால் அதிகரிக்கும் என உலக சுகாதார ஸ்தாபனம் கடந்த திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கையில் எச்சரித்துள்ளது.

புகையிலைப் பாவனையிலான மாற்றம், நோய்களுக்கு சிறப்பான எதிர்ப்பு மருந்துகளை வழங்குவது என்பன மூலம் 7 மில்லியன் பேரின் உயிரைக் காப்பாற்றக் கூடியதாக இருக்கும் எனவும் சுட்டிக்காட்டியது.

80 சதவீதத்திற்கும் அதிகமான புற்றுநோய் பாதிப்பு குறைந்த வருமானம் பெறும் நாடுகளில் இடம்பெறும் என்றும் எதிர்வு கூறியது. (ஐ)

## ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுனவில்

# மைத்திரிக்கு இணைத்தலைமை வேண்டும் மகிந்த அணியுடன் மல்லுக்கட்டுகிறது சு.க.



(கொழும்பு)

இணைத் தலைமைத்துவ விடயம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - பொதுஜன பெரமுனவுக்கிடையிலான ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்ட முக்கிய அம்சமாகும்.

அவ்வாறிருக்கையில் அதை மறுத்து செயற்படுவதையோ, ஒப்பந்தங்களை மீறிய வகையில் ஊடகங்களுக்கு கருத்துக்களை வெளியிடுவதோ ஏற்புடையதல்ல என அதிருப்தி வெளியிட்ட சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜெயசேகர, கூட்டணிக் கட்சிகளின் கட்சித் தலைவர்களுடனான சந்திப்பில் இந்த விடயம் குறித்து கூடிய கவனம் செலுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் "ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன மற்றும் ஏனைய பங்காளிக் கட்சிகள் இணைந்த கூட்டணியில்இணைத் தலைமைத்துவம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும், பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் ஏக தலைமைத்துவத்தில் மாத்திரமே புதிய கூட்டணி செயற்படும் என்றும் கூறியுள்ளமை குறித்து நேற்று முன்தினம் வினவிய போதே தயாசிறி ஜெயசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலைப் போன்று பொதுத் தேர்தலிலும் "ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன" என்ற கூட்டணியிலேயே போட்டியிடவுள்ளோம்.

இந்தக் கூட்டணியில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இணைத் தலைமைத்துவம் வழங்கப்பட வேண்டும் என்ற அம்சம் ஒப்பந்தத்தில் உள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் உள்ளார். எனவே புதிய கூட்டணி அமைக்கப்பட்டதன் பின்னர் அவருக்கும் முக்கிய பதவி வழங்கப்பட வேண்டும். இதனை ஜனாதிபதித் தேர்தலின் போது பொதுஜன பெரமுனவும் ஏற்றுக் கொண்டது.

ஆனால் தற்போது அதனை மறுக்கும் வகையில் கருத்துக்களை வெளியிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருக்கும் விடயங்கள் தொடர்பில் கட்சித் தலைவர் கூட்டத்தில் பேசப்பட்டவற்றை ஊடகவியலாளர் சந்திப்புக்களில் கூறுவது பொருத்தமானதாக இருக்காது.

இவ்விடயம் தொடர்பில் தீர்க்கமான முடிவொன்று எடுக்கப்பட வேண்டும் என்று அடுத்த கட்சித் தலைவர் கூட்டத்தில் வலியுறுத்துவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொரோனாவை கட்டுப்படுத்த ஆயுர்வேத வைத்திய முறையை கண்டறிய விசேட நடவடிக்கை

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் நோய் பரவுவதைத் தடுப்பதற்காக ஆயுர்வேத வைத்திய தீர்வை கண்டறிவதற்கு விசேட பேச்சுவார்த்தையொன்று நடைபெற்றது எனச் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் உள்ளிட்ட வைரஸ் தாக்கங்களை தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் ஆயர்வேத மருத்துவம் மூலம் தீர்வு கண்டறியப்படவுள்ளதோடு, வைரஸை கட்டுப்படுத்துவதற்கு சுதேசிய வைத்திய முறையின் மூலம் மேற்கொள்ளக் கூடியதாகவும் சுகாதாரப் பாதுகாப்பு முறை குறித்த பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

தற்போது பரவிவரும் கொரோனா வைரஸ், வேறொருவருக்கு தொற்றை ஏற்படுத்தும் வைரஸின் ஊடாக பரவுவதன் மூலமும், பிராணிகள் மூலமும் நபர்கள் மத்தியில் இடம்பெறும் இருமல் மற்றும் தும்மல் ஆகியவற்றின் மூலமும் சுற்றாடலில் பரவும் வைரஸின் மூலமும் நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் தொடுதல் அல்லது கைகள் அல்லது முகங்களை தொடுவதன் மூலமும் அவர்கள் பயன்படுத்தும் உபகரணங்களை தொடுவதன் மூலமும் பரவுகிறது.

எனவே கொரோனா வைரஸில் இருந்து பாதுகாப்பதற்காக சுதேசிய வைத்திய முறையில் உள்ள ஆலோசனை சிகிச்சை மற்றும் மருந்துகள் மூலம் பரவும் வைரஸ்களை கட்டுப்படுத்துவதற்கு சுதேசிய வைத்திய முறை



யின் மூலம் மேற்கொள்ளக்கூடிய சுகாதாரப் பாதுகாப்பு முறை தொடர்பாக பொதுமக்களுக்கு தெளிவுபடுத்துவது குறித்து இதன் போது விரிவான முறையில் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அர்த்த பஞ்சகம்

ஒருத்தர் அவசரமாக போய்க்கொண்டிருந்தார். "எங்கே போய்க் கொண்டு இருக்கிறீர்கள்?'' என்று கேட்டார் ஒரு பெரியவர். கடைக்குப் போகின்றேன் சேர் ... பொருட்கள் வாங்க என்றார். அங்கே போவதற்கு முன்னர் தெரிந்துகொள்ள வேண்டியதெல்லாம் தெரிந்துகொண்டீர்களா? என்று கேட்டார் பெரியவர்.

'கடைக்குப் போய் காசைக் கொடுத்து ஒரு பொருளை வாங்கிக் கொண்டு வரப் போகின்றேன். இதிலே தெரிந்துகொள்ள வேண்டியது என்ன இருக்கிறது என்றார்" அலட்சியமாக! இப்போது அந்தப் பெரியவர் பேச ஆரம்பித்தார். "இந்த உலகத்திலே எந்த ஒரு செயலிலும் இறங்கும் போதும் நாம் நல்ல ஆலோசனை செய்ய வேண்டிய விடயம் ஐந்து" என்றார்.

உதாரணமாக ஒருத்தர் கடைக்குப் போய் ஏதோ ஒரு பொருளை வாங்கிவிட்டு வரப்போகின்றார் என்று வைத்துக்கொள்ளுங்களேன். அப்போது கூட அவன் ஐந்து விடயங்களைப்பற்றி தெரிந்திருக்க வேண்டியுள்ளது என்கிறார் அவர். முதலில் "அந்தப்பொருள் எப்படிப்பட்டது'' என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். இரண்டாவதாக தன்னைப்பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டும். அப்போது தான் அந்தப்பொருள் தனக்குத் தேவையா? இல்லையா? என்கிறதைப் புரிந்துகொள்ள முடியும். மூன்றாவதாக அந்தப் பொருளை அடைவதற்கு வழி என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது எவ்வளவு பணம் கொடுத்தால் அது கிடைக்கும்... இது மாதிரியான விடயங்கள். நான்காவதாக அந்தப் பொருளை அடைவது மூலமாக நாம் அடையக் கூடிய பயன் என்ன? என்பதையும் உணரலாம்! ஐந்தாவதாக அந்தப் பொருளை அடைவதில் இருக்கக் கூடிய தடை எது? என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்!

பெரியவர் பேசுவது ஏதோ தத்துவம் மாதிரி தெரியுதல்லவா? தத்துவம் தான்! நமக்குப் புரியவில்லை என்றால் அது தத்துவம் தானே! இப்படி உலகியல் வாழ்க்கையிலே சின்னச் சின்ன விடயங்களிலேயே நாம் ஐந்து விடங்களைத் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாக இருக்கின்றது!

பேரின்ப நிலை என்று சொல்கிறார்களே...அது மாதிரி பெரிய சமாச்சாரங்களிலும் ஐந்து விடயங்களை நாம் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கின்றது. அதற்குப் பெயர் அர்த்த பஞ்சகம். வைணவ சமயத்திலே அர்த்த பஞ்சகம் என்பது மிகப் பெரிய விடயம். கடைக்குப் போவது போல கடவுளைப் பார்க்கப் போகின்ற போதும் நாம் ஐந்து விடயங்களை தெரிந்து கொள்ள வேண்டும்.

முதலிலே பரம்பொருள் என்பது என்ன? அதன் தன்மைகள் என்ன? இதை தெரிந்து கொள்ள வேண்டும். இதற்கு பரமாத்ம ஸ்வரூபம் என்று பெயர்! இரண்டாவதாக நாம் யாரு? நம்முடைய தன்மைகள் என்ன? அப்படியான விடயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். இதற்கு ஜீவாத்த ஸ்வரூபம் என்று பெயர்! நான் யார் என்று எனக்கே தெரியவில்லை என்ற போது இதை நான் சொல்கின்றேன் என்றும் இது என்னுடையது என்றும் சொல்வது தவறு தானே! மூன்றாவது விடயம் பரம்பொருளை நாம் அடைவதற்கு வழி எது? இதை தெரிந்து கொள்ளவேண்டும். இதற்கு உபாயஸ்வரூபம் என்று பெயர். நான்காவது விடயம் நாம் அடைய வேண்டிய பயன்கள் என்ன என்பதை தெரிந்து கொள்வது. இதற்கு புருஷார்த்தம் (பயன்) என்று பெயர். ஐந்தாவது, அந்த பயனை அடைய விடாமல் தடுக்கின்ற தடைகள் எவை என்பதை தெரிந்துகொள்வது. இது விரோதி ஸ்வரூபம்! இதைத்தான் தடையியல் என்று சொல்கின்றார்கள்.

அதாவது பரமாத்மாவைப் பற்றிய அறிவு ஜீவாத்மாவைப் பற்றிய அறிவு உபாயம் பற்றிய அறிவு புருஸாத்தம் பற்றிய அறிவு இந்த நான்கு அறிவிற்கும் எதிரிடையாக அதாவது அதை எல்லாம் தப்பாக புரிந்து கொள்வதனாலேயே உண்டாக்கக் கூடிய அறிவு விரோதிஸ்வரூபம்.

என்ன சேர் இது. தகவலிலே ஏதாவது கதை சொல்வீர்கள் என்று பார்த்தால் ஏதோ தத்துவம் பேசிக் கொண்டிருக்கின்றீர்கள் என்று நீங்கள் நினைக்கலாம்.இதுவும் தெரிந்து இருக்க வேண்டிய ஒரு பெரிய விடயம் தான்.காதிலே போட்டு வையுங்களேன். காலத்திலே உபயோகப்படும்.

என்னுடைய நண்பர் ஒருவர் ஒரு நாள் என்னிடம் சொன்னார் "சேர்... அடுத்த மாதம் தஞ்சாவூரிலே ஒரு கல்யாணம்! அதற்குப் போவதா? வேண்டாமா? என்று குழப்பமாக இருக்கு'' என்றார். நான் உடனே அர்த்த பஞ்சக உபதேசம் செய்ய ஆரம்பித்தேன். அவர் எல்லாத்தையும் பொறுமையாக கேட்டுக் கொண்டு இருந்துவிட்டு "சரி சேர் நான் போவது என்று முடிவு செய்துவிட்டேன் என்றார்.

"எப்படி இந்த முடிவிற்கு வந்தீர்கள்?'' என்று கேட்டேன். அவர் சொன்னார் சேர் இரண்டாவது விடயத்தில் ஒன்று சொன்னீர்களே அதைப் புரிந்துகொண்டதற்குப் பின் நான் இந்த முடிவிற்கு வந்தேன் என்றார். என்ன இரண்டாவது விடயம் என்றேன்.

"தன்னைப்பற்றி புரிந்துகொள்ள வேண்டும் என்றும் சொன்னீர்களே... உடனே என்னைப் பற்றி புரிந்துகொண்டேன். நான் யார் என்பது எனக்கு தெரிந்தது... உடனே போவதுதான் நல்லது என்று முடிவெடுத்துவிட்டேன் என்றார். நீங்கள்– யார்? என்று கேட்டேன். நான் தான் அந்தக் கல்யாணத்தில்... தாலி கட்ட வேண்டிய மாப்பிள்ளை!" என்று கூறினார்.

# துறைமுகங்கள் ஊடாக கொரோனா பரவுவதைத் தடுக்க நடவடிக்கை



(கொழும்பு)

கொழும்புத் துறைமுகம் உள்ளிட்ட நாட்டின் அனைத்துத் துறைமுகங்களிலிருந்தும் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க வெற்றிகரமான திட்டத்தை செயற்படுத்தியுள்ளதாக இலங்கைத் துறைமுக அதிகார சபை தெரிவித்தது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சின் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.எம்.ஆனல்ட் தெரிவிக்கையில்,

அவுஸ்திரேலியாவில் இருந்து பயணத்தை ஆரம்பித்த நிலையில், தாய்லாந்தில் இருந்து வந்த கப்பல் ஒன்று நேற்று முன்தினம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் சுகாதார ஊழியர்களால் இந்த சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவித்த அவர், கொரோனா வைரஸ் தொடர்பில் பாரியளவிலான முன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதன்படி, கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்த "Sun Princess" பயணிகள் கப்பல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் இதன்போது எவ்வித நோயாளர்களும் அல்லது நோய் அறிகுறிகள் உள்ளவர்களும் இனங்காணப்படவில்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஐ)

# ஜனாதிபதி அலுவலகத்திற்கு அருகே "ஆர்ப்பாட்ட இடம்" பெயர்ப்பலகை

(கொழும்பு)

கொழும்பில் உள்ள ஜனாதிபதி அலுவலகத்திற்கு அருகே, "ஆர்ப்பாட்ட இடம்" என புதிதாக அடையாளமிடப்பட்ட பெயர்ப்பலகையொன்று அமைக்கப்பட்டது.

இவ்வாறு ஒதுக்கப்பட்ட புதிய இடம் குறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை.

ஆனால் நேற்று அந்தப் பகுதிக்கு சென்ற பொதுமக்கள் இதனைப் புகைப்படம் எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டனர்.

அந்தவகையில் ஜனாதிபதியின் அலுவலகத்திற்கு வருபவர்கள் வாகனங்களை தரித்து நிறுத்தும் வாகனத் தரிப்பிடத்திலே இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டது.




கடந்த வாரம் காலி முகத்திடலில் பிரதான வீதியைத் தடுத்து ஜனாதிபதியின் அலுவலகத்திற்கு முன்பாக பல போராட்டங்கள் நடத்தப்பட்ட நிலையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.(ஐ)

# மனைவியுடன் தலைமறைவான விமானசேவை முன்னாள் நிறைவேற்று அதிகாரி

(கொழும்பு)

கைது செய்யுமாறு நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கன் விமான சேவையின் முன்னாள் நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேனவும், அவரது மனைவியும் வீட்டில் இருந்து வெளியேறி தலைமறைவாகியுள்ளனர்.

குற்றவியல் விசாரணை திணைக்கள அதிகாரிகள் நேற்று கொழும்பு - 7 இல் உள்ள இவர்களின் வீட்டுக்குச் சென்ற போது அவர்கள் தலைமறைவாகியமை தெரியவந்தது.

2013 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்திற்கு எயார் பஸ் விமானங்களை கொள்வனவு செய்த போது இலஞ்சம் பெற்றமை தொடர்பாக இவர்களை கைது செய்யுமாறு உத்தரவிடப்பட்டது. இந்நிலையில் அவர்கள் தலைமறைவாகியமை குறிப்பிடத்தக்கது.

இவர்களின் வங்கிக் கணக்குகளை பரிசோதிக்கவும் குற்றவியல் விசாரணை திணைக்களம் நீதிமன்றத்திடம் அனுமதியை பெற்றுள்ளது. கபில சந்திரசேன மற்றும் அவரது மனைவி ஆகியோர் நாட்டில் இருந்து வெளியேறவும் நீதிமன்றம் தடைவிதித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# திடீர் மின் துண்டிப்புக்கள் தொடர்பில் மின்சார சபையிடம் அறிக்கை கோரும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

(கொழும்பு)

பொதுமக்களுக்கு முன்னறிவித்தல் இன்றி மேற்கொள்ளப்பட்ட மின் துண்டிப்புக்கள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இலங்கை மின்சார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ள பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர் நடவடிக்கை எடுக்க எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தது.

வத்தளை, ஜாஎல, கந்தானை, களனி, மஹரகம, பொரலஸ்கமுவ, நுகேகொட, மிரிஹான மற்றும் ஹிக்கடுவ ஆகிய பகுதிகளுக்கு முன்னறிவித்தலின்றி மின் துண்டிக்கப்பட்டதாக குறிப்பிட்டு பிரதேச மக்களால் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன.

இது தொடர்பில் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பெருநிறுவன தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜனாத் ஹேரத் தெரிவிக்கையில்,

வத்தளை, ஜாஎல, கந்தானை, களனி, மஹரகம, பொரலஸ்கமுவ, நுகேகொட, மிரிஹான மற்றும் ஹிக்கடுவ ஆகிய பகுதிகளுக்கு கடந்த திங்கட்கிழமை முன்னறிவித்தலின்றி மின் துண்டிக்கப்பட்டுள்ளதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. சுமார் இரண்டு மணித்தியாலயங்கள் வரை மின் துண்டிப்பு நீடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சாதாரணமாக மின் துண்டிப்பு செய்ய முன்னர் அது தொடர்பில் பொதுமக்களை தெளிவுபடுத்துவது கட்டாயமாகும். இவ்வாறு பொதுமக்களுக்கு எந்தவித அறிவிப்பையும் வழங்காது வெறுமனே மின் துண்டிப்பை மேற்கொள்ள முடியாது. அவ்வாறு மேற்கொள்ளப்பட்டால் அது சட்ட விரோத செயலாகவே கருதப்படும். இந்த விடயம் தொடர்பில் மின் பரிமாற்றம் மற்றும் விநியோகம் தொடர்பான அனுமதிப் பத்திரத்தின் 10 ஆவது சரத்திலும் கூறப்பட்டுள்ளது.

இலங்கை மின்சாரசபையால் மேற்கொள்ளப்பட்ட இந்த மின் துண்டிப்புக்கள் தொடர்பில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளோம். இவ்வாறு அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவும் எதிர்பார்த்திருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மட்டு.முகத்துவாரத்தில் படகு கவிழ்ந்து விபத்து



(ஏறாவூர்)

மட்டக்களப்பு முகத்துவாரத்தில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த போது படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. எனினும் இந்த விபத்தில் உயிர் ஆபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பாலமீன்மடு பகுதியில் இருந்து மூன்று மீனவர்கள் நேற்று புதன்கிழமை காலை முகத்துவாரம் கடற்பகுதியில் மீன்பிடிக்கச் சென்றனர்.

இதன்போது பாரிய கடல் அலையில் சிக்கி மீன்பிடிப் படகு கவிழ்ந்த நிலையில், மூன்று மீனவர்களும் கடலில் வீழ்ந்தனர்.

கவிழ்ந்த படகைப் பிடித்துக் கொண்டு மீனவர்கள் சத்தமிட்டதைத் தொடர்ந்து, அப்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த ஏனைய மீனவர்கள் அப்பகுதிக்கு விரைந்து வந்து மீனவர்களை காப்பாற்றினர்.

மீனவர்கள் விரைந்து வந்து உதவியதன் காரணமாக கடலில் மூழ்கிய மூன்று மீனவர்களும் பாதுகாப்பாக மீட்கப்பட்டதுடன், கடலில் மூழ்கிய படகும் மீட்கப்பட்டு கரைக்கு கொண்டு வரப்பட்டது. (ஐ)

# செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா நாளை 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சித்தன்கேணி பெரியவளவு மகா கணபதி பிள்ளையார் ஆலய முன்றலில் பிற்பகல் 1.30 மணியளவில் அதிபர் பா.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன், சிறப்பு விருந்தினராக சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆ.நோபேட்உதயகுமார், கௌரவ விருந்தினரர்களாக சித்தன் கேணி பெரியவளவு மகா கணபதிப்பிள்ளை ஆலய பரிபாலன சபைத் தலைவர் பூ.சிவகுமார், சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத் தலைவர் ம.யுவராஜ் ஆகியோர் கலந்து கொள் வர். (இ-17)

# தேசிய வர்த்தகக்கொள்கையை உருவாக்குவதற்கான ஆரம்பம்

(கொழும்பு)

சர்வதேச வர்த்தகத்தில் இடம் பெறக்கூடிய சவால்களை முறியடிக்கும் வகையில் தேசிய வர்த்தக கொள்கையொன்றை உருவாக்குவதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நாட்டின் 72 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு தேசிய வர்த்தக கொள்கைக்கான ஆரம்பத்தை விளக்கும் விசேட கண்காட்சி கொழும்பிலுள்ள தொழில்துறைசார்ந்தோரின் சங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டார்.

நாடு சுதந்திரமடைந்து 72 வருடங்கள் கடந்தபோதும் தேசிய வர்த்தகக் கொள்கையொன்று இல்லாமையால் கடந்த வருடம் இவ்விடயம் அதிகம் விவாதத்துக்குள்ளானதாகவும் இதன்போது தொழில்துறைசார்ந்தோரின் தேசிய ஒன்றியத்தினர் சுட்டிக் காட்டினர். தேசிய வர்த்தகக் கொள்கை அமுலில் இருக்குமாயின் பல வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்ள முடிவதுடன் சவால்களை முறியடிக்க முடியுமென்றும் அவர்கள் சுட்டிக் காட்டினர். (இ-7)

# மக்களுக்கு சேவையாற்றத் தேவையான பின்னணியை ஜனாதிபதி உருவாக்கியுள்ளார்

## சந்திம சுட்டிக்காட்டு



(கொழும்பு)

கடந்த காலத் தவறுகளை புரிந்து கொண்டு மக்களுக்கு சேவையாற்றத் தேவையான பின்னணியை ஜனாதிபதி உருவாக்கியதாக நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

ஊடகங்களிடம் நேற்று தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம் வீடமைப்புக்கு என்று கூறி வீடமைப்பு பிரசாரத்திற்காக ஒதுக்கிய நிதியைப் பயன்படுத்தி தற்கால அரசாங்கம் வீடுகளை நிர்மாணித்து வருகிறது.

நாங்கள் தற்போது தவறுகளை புரிந்து கொண்டு செயற்பட்டு வருகின்றோம். மக்கள் எதிர்பார்க்கும் விடயங்களை தவிர வேறு எதனையும் தற்போதைய அரசாங்கம் செய்யாது என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஐ)

# கோப்குழு அங்கத்தவர்களின் பெயர்கள் அறிவிப்பு

(கொழும்பு)

16 பேர் கொண்ட கோப் குழுவில் உள்ளடங்கும் அங்கத்தவர்களின் பெயர், விபரங்களை சபாநாயகர் கரு ஜெயசூரிய வெளியிட்டார்.

நாடாளுமன்ற அமர்வு நேற்றுப் புதன்கிழமை பகல் ஆரம்பமானது. இதன்போதே சபாநாயகர் கரு ஜெயசூரிய இந்தத் தகவலை வெளியிட்டார்.

அதன்படி இராஜாங்க அமைச்சர்களான அநுர பிரியதர்ஷன யாப்பா, சுசில் பிரேம ஜயந்த, மகிந்தானந்த அளுத்கமகே, தயாசிறி ஜயசேகர, ஜெயந்த சமரவீர, மொஹான் பிரியதர்ஷன டி சில்வா ஆகியோர் கோப் குழுவில் உள்ளடங்குகின்றனர்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், விஜயதாஸ ராஜபக்ஷ, ஹர்ஷ டி சில்வா, அஜித் பி பெரேரா, சிறியானி விஜேவிக்கிரம, ரஞ்சன் ராமநாயக்க, அசோக் அபேசிங்க, சுனில் ஹந்துநெத்தி, மாவை சேனாதிராசா மற்றும் டி.வி.சானக்க ஆகியோர் இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். (இ-7)

# மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தில் ஊழல்

## ஜோன்ஸ்டன் குற்றச்சாட்டு



(கொழும்பு)

மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தில் ஊழல் இடம்பெற்றதாக நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ குற்றச்சாட்டினை முன்வைத்தார்.

சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் நேற்று புதன்கிழமை ஆரம்பமான நாடாளுமன்ற அமர்வின்போது அமைச்சரிடம் இவ்விடயம் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

அக் கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர், தெரிவிக்கையில், இந்தத் திட்டத்திற்காக மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் 2.5 பில்லியனுக்கு வழங்கிய ஒப்பந்தம் கடந்த ஐ.தே.க. அரசாங்கத்தால் இரத்து செய்யப்பட்டு 3.5 பில்லியன்களுக்கு வழங்கப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

எனவே ஏன் அதிக விலைக்கு வழங்கப்பட்டது என்பது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் அரசியல் காரணங்களுக்காக இந்தத் திட்டத்தை நிறுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

எவ்வாறாயினும் மத்திய அதிவேக நெடுஞ்சாலை திட்டத்தை விரைவாக மேற்கொள்ள தற்போதைய அரசாங்கம் முயற்சித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அந்தவகையில் மீரிகமவை குருநாகலுடன் இணைக்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்திற்குள் நிறைவடையும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# இலங்கையில் அதிசய நீரூற்று

(வெலிமடை)

வெலிமடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெல்லேவெல கிராமத்தில் அதிசய நீரூற்று ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது.

எவ்வளவு வரட்சி ஏற்பட்டாலும் நீர் வற்றிப்போகாத நீரூற்றே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது. இது இயற்கையாகவே நீர் வரும் நீரூற்று என தெரிவிக்கப்படுகிறது.

கடுமையான வரட்சியின் போதும், அடை மழையின் போதும், அந்த நீரூற்றின் நீர் மட்டம் ஒரே அளவில் காணப்படும்.



எனினும் அந்த நீர் பயன்படுத்தப்படாமல் உள்ளதாக பிரதேச மக்கள் கவலை வெளியிட்டனர்.

குறித்த பிரதேசத்தில் சுமார் 300 குடும்பங்கள் குடிநீரின்றி சிரமத்திற்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

எனினும் இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க துறைசார் அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை என அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்தனர். (இ-7)

# செய்தித்துளிகள்

## செவ்வேள் இராஜினாமா

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் க.செவ்வேள் தனது பதவியை இராஜினாமாச் செய்தார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சகல அதிகார சபைகளின் தலைவர்களையும் இராஜினாமா செய்யுமாறு விடுத்த கோரிக்கைக்கு அமையவே இவர் பதவி விலகினார். (இ-3-10)

## பசறையில் ஒரு தொகை துப்பாக்கி ரவைகள் மீட்பு

(கொழும்பு)

பசறை - கனவரல்லை பெருந்தோட்டத்தை அண்மித்த அடர்ந்த காட்டுப் பகுதியில் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன. எஸ்.எல்.ஆர். துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் ரவைகளே நேற்று முன்தினம் மீட்கப்பட்டன. பசறைப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலொன்றையடுத்தே இவை மீட்கப்பட்டன. இது குறித்து எவரும் கைது செய்யப்படாத நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## "பெரியார் பெறும் முக்கியத்துவம்" யாழில் விசேட கலந்துரையாடல்

(குப்பிழான்)

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் சமகால தமிழ்ச் சமூகத்தில் "பெரியார் பெறும் முக்கியத்துவம்" எனும் தலைப்பிலான விசேட கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணியளவில் இல.62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி எனும் முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறும். ஆய்வாளரும், சமூக செயற்பாட்டாளருமான ச.சத்தியதேவன் தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் எழுத்தாளரும், தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவரும், தாயகம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான க. தணிகாசலம் கருத்துரை வழங்குவார். கருத் துரையைத் தொடர்ந்து திறந்த கலந்துரையாடலும் நடைபெறும். (இ-18)

## பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா

(கொடிகாமம்)

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ் இணையக் கல்விக் கழகத்துடன் இணைந்து நடத்தும் வட மாகாணத்தின் 4ஆவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் டச்சுவீதி மீசாலை மேற்கில் அமைந்துள்ள பரமேஸ்வரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-114)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 130 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 240 | 230 | 250 |
| தக்காளி | 300 | 400 | 400 | 300 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 120 | 100 | 100 |
| கோவா | 150 | 140 | 140 | 130 | 160 |
| கரட் | 300 | 180 | 400 | 260 | 480 |
| பூசணி | 140 | 100 | 130 | 170 | 160 |
| புடோல் | 140 | 120 | 140 | 110 | 160 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 100 | 160 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 350 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 130 | 110 | 140 |
| பாகற்காய் | 200 | 150 | 110 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 140 | 80 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 100 |
| பயற்றங்காய் | 200 | 200 | 240 | 220 | 260 |
| லீக்ஸ் | 300 | 300 | 350 | 350 | 300 |
| பீற்றூட் | 180 | 140 | 140 | 250 | 200 |
| கறிமிளகாய் | 250 | 200 | 200 | 250 | 240 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 800 | 500 | 1000 |
| போஞ்சி | 250 | 200 | 300 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 90 | 90 | 100 |
| கீரை-1பிடி | 50 | 25 | 30-40 | 30 | 40 |
| தேசிக்காய் | 50 | 20 | 60 | 50 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 50 | 65 | 40-70 |
| இராசவள்ளி | 200 | 150 | 200 | 150 | 220 |
| வெங்காயப்பூ | 250 | 180 | 250 | 200 | 300 |
| முள்ளங்கி | 50 | 160 | 60 | 70 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | — | 30 | 40 |
| வல்லாரை | 15 | 70 | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | 100 | — | — | 120 | 100 |

# நீண்டகாலத்திற்குப் பின்னர் யாழில் வெளிநாட்டுப் பறவைகள்





(படங்கள்: ஐ.சிவசாந்தன்)




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்லுண்டாய் மற்றும் தீவகப் பகுதிகளுக்குப் பல ஆண்டுகளுக்கு பின் அவுஸ்திரேலியாவிலிருந்து பிளமிங்கோ உள்ளிட்ட வெளிநாட்டுப் பறவைகள் அதிகளவில் வந்துள்ளன.

இனப்பெருக்கம் மற்றும் பருவ நிலை மாற்றங்களை அனுபவிக்க வரும் அரிய வகை வெளிநாட்டு பறவைகளின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளாக குறைவடைந்திருந்தன.

எனினும் இம்முறை சீரான மழைவீழ்ச்சி காணப்பட்டதால் யாழ்ப்பாணம்-காரைநகர் வீதி கல்லுண்டாய் பகுதி மற்றும் தீவகம் அல்லைப்பிட்டி முதல் நாராந்தனை வரையான தரவைப் பகுதி என்பவற்றில் வரத்து நீர் காணப்படுகின்றது.

சாம்பல் நாரை, அரிவாள் மூக்கன், புதிய வகையான ஆசிய ஓபன் பில் நாரைகள் அந்தப் பகுதியில் அதிகளவில் காணப்படுகின்றன. இந்த வகை நாரைகள் இந்தியத் துணைக்கண்டம் மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் காணப்படுவதாக கூறப்படுகிறது.


இந்த நாரை தனது உணவைத் தேடி நீண்ட தூரம் பறக்கக்கூடியது. இந்த நாரைகள் தற்போது யாழ்ப்பாணத்துக்கு வந்து அதிகளவில் தனித்தனியாக ஆங்காங்கே காணப்படுகின்றன. இவற்றை பொதுமக்கள் மிகுந்த ஆர்வத்துடன் பார்வையிடுகின்றனர்.

ஒக்டோபர் மாதம் ஆரம்பமாகி, மார்ச் மாதம் வரை இந்தப் பறவைகள் தமது நாடுகளிலிருந்து இனப்பெருக்கம் மற்றும் பருவ நிலை மாற்றங்களை அனுபவிக்க இடம்பெயர்ந்து செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

"ஏனைய பறவைகளைப்போல் பிளமிங்கோ பறவைகள் மீன்களை உண்ணாது. கடலில் உள்ள பாசிகளையே உணவாக உட்கொண்டு வாழும் பறவையாகும். மற்ற பறவைகளை போல மரங்களில் கூடு கட்டி வாழாது. தண்ணீரிலேயே நின்ற படியே தூங்கும்" என்று பறவைகள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். (இ-7)

# இலங்கை அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும்

## ரஜினிகாந்த் வலியுறுத்து



(சென்னை)

இந்தியாவில் இருக்கும் இலங்கை அகதிகளுக்கு இரட்டை குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என நடிகர் ரஜினிகாந்த் வலியுறுத்தினார். குடியுரிமை திருத்த சட்டம் தொடர்பாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சென்னையில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த அவர், குறித்த கோரிக்கையினை விடுத்தார்.

இதன்போது இலங்கை மக்களை எவ்வாறு நாட்டிலிருந்து வெளியேற்றுவார்கள் என கேள்வியெழுப்பிய ரஜினி, அவர்களுக்காக தொடர்ந்தும் குரல் கொடுப்பேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மணற்காட்டுக் கிராமத்தில் மரக்கன்றுகளுக்கான பெயர்ப்பலகை திரை நீக்கம்




(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் நாட்டப்பட்ட மரக்கன்றுகளுக்கான பெயர்ப்பலகை திரை நீக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பங்குத்தந்தை டி.யூக்வின்ஷன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் மணற்காட்டுக் கடற்கரையோரத்தில் 750 மரக்கன்றுகள் நடப்பட்டதுடன் ஆறு வீதிகளுக்கான பெயர்ப்பலகைகளும் திரை நீக்கம் செய்யப்பட்டன.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் மருதங்கேணிப் பிரதேச செயலர் கே.பிரபாகரமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-10-60)

# நிர்பயா கொலைக்குற்றவாளிகளை தனித்தனியே தூக்கிலிட முடியாது

## டில்லி உயர் நீதிமன்றம் உத்தரவு

(டில்லி)

நிர்பயா கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை தனித்தனியே தூக்கிலிட முடியாது என டில்லி உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

குறித்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டிருந்தவர்களைத் தனித்தனியாக தூக்கிலிட வேண்டும் என கோரி டில்லி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான விசாரணைகள் நேற்று புதன்கிழமை இடம்பெற்றன. இதன்போதே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது.

மேலும் குறித்த வழக்கில் கருத்து தெரிவித்த டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி சுரேஷ் கெய்ட், 'ஒரே வழக்கு ஒரே தண்டனைக்குள்ளான குற்றவாளிகளை தனித்தனியே தூக்கிலிடுதல் எனும் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது.

4 பேரையும் ஒரே நேரத்தில் தான் தூக்கிலிட வேண்டும். 4 பேரும்தாமதமாக சீராய்வுமனுவை தாக்கல் செய்தனர். 4 பேரும் அனைத்து சட்ட நிவாரணங்களையும் ஒரு வாரத்திற்குள் பயன்படுத்த வேண்டும். சட்ட நிவாரணங்களை காரணம் காட்டி குற்றவாளிகள் காலம் தாழ்த்துவதை ஏற்க முடியாது' என மறுத்துள்ளார்.

டில்லியில் 2012ஆம் ஆண்டு மருத்துவ மாணவி நிர்பயா, பலாத்காரம் செய்து கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகளான முகேஷ் சிங், பவன் குப்தா, வினய் சர்மா, அக்ஷய் சிங் ஆகிய 4 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. குற்றவாளிகள் தொடர்ச்சியாக கருணை மனு மற்றும் சீராய்வு மனுக்களை தாக்கல் செய்து வந்ததையடுத்து, தண்டனையை நிறைவேற்றுவதில் சிக்கல் நீடிக்கிறது.

இதையடுத்து, நிர்பயாவை குற்றவாளிகளை தூக்கிலிட விதிக்கப்பட்ட தடைக்கு எதிராகவும் அவர்களை தனித்தனியாக தூக்கில் போட அனுமதி கோரியும் மத்திய அரசு மற்றும் திஹார் சிறை நிர்வாகம் சார்பில் டில்லி உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 2 ஆயிரம் பயணிகளுடன் இலங்கை வரும் கப்பல் கொரோனா தொற்று குறித்து தீவிர பரிசோதனை

(கொழும்பு)

சுமார் 2 ஆயிரம் பயணிகளுடன் இலங்கை நோக்கி கப்பல் ஒன்று வந்து கொண்டிருப்பதாக பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் லக்ஷ்மன் கம்லத் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்று குறித்த அச்சம் உலகம் முழுவதும் ஏற்பட்டுள்ள நிலையில் குறித்த கப்பலில் இலங்கை வரும் அனைத்துப் பயணிகளையும் பரிசோதிப்பதற்கான ஏற்பாடுகள் முழுமை அடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

விமான நிலையத்துக்கு வரும் பயணிகளை சோதனைக்கு உட்படுத்தும் முறையில் கப்பலில் வரும் பயணிகளையும் சோதனைக்குட்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கைக்கு விமான நிலையம் ஊடாக வரும் பயணிகளில், விசேட அவதானம் தேவைப்படும் பயணிகளைக் கண்காணிக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் பணிப்பாளர் நாயகம் கம்லத் தெரிவித்தார்.

சுகாதார அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் பயன்படுத்தக்கூடிய வகையிலான திறன்பேசி செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதன் ஊடாக உடனுக்குடன் பயணிகளைக் கண்காணிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கொரோனா வைரஸ்; இலங்கையர்கள் மூவர் அங்கொடையில் அனுமதி

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகினர் என்ற சந்தேகத்தில், சீனாவிலிருந்து நாடு திரும்பிய மூன்று இலங்கையர்கள் அங்கொடை தொற்று நோய்த் தடுப்பு (ஐ.டி.எச்) வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

குறித்த மூவரும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அங்கொடை வைத்தியசாலைக்கு சிகிச்சைகளுக்காக சென்ற நிலையில், இவ்வாறு சந்தேகத்தின் பேரில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனினும் அவர்களுக்கு கொரோனா தொற்று இருப்பது இதுவரை உறுதி செய்யப்படவில்லை.


அத்துடன் இதுவரை இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான ஒருவரே கண்டறியப்பட்டுள்ளதாகவும் அந்த சீனப் பெண்ணுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டு அவர் தற்போது குணமடைந்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை குறித்த சீனப் பெண்ணை வைத்தியசாலையிலிருந்து வெளியேற அனுமதிப்பது குறித்த தீர்மானத்தை சிகிச்சையளித்த வைத்தியர்களும் தொற்று நோய் குறித்த விஷேட வைத்திய நிபுணர்களும் இணைந்து பேசி முடிவெடுப்பர் என பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் லக்ஷ்மன் கம்பலத் தெரிவித்தார்.

கொரோனா வைரஸின் உருவாக்க இடமாகக் கருதப்படும் சீனாவின் வுஹான் நகரிலிருந்து அழைத்துவரப்பட்ட 33 இலங்கையர்கள் தொடர்ந்தும் தியத்தலாவை இராணுவ முகாமில் அமைக்கப்பட்டுள்ள விசேட தொற்று நோய் கண்காணிப்பு மையத்தில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

எனினும் இதுவரையில் அவர்களுக்கு கொரோனா தாக்கம் உள்ளமை தொடர்பாக சந்தேகிக்கும்படியான எந்த அறிகுறிகளும் கண்டறியப்படவில்லை என பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நாடாளுமன்ற உறுப்பினராக சமன் ரத்னபிரியா பதவியேற்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக சிவில் சமூக ஆர்வலர் சமன் ரத்னபிரிய பதவியேற்றார். சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின்போதே சமன் ரத்னபிரிய இவ்வாறு பதவியேற்றுக்கொண்டார். ஜயம்பதி விக்கிரமரத்னவின் இராஜினாமாவையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1968

Search for people, places and things

### தக்ஷி

உசுப்பேத்துறவன் கிட்ட உம்முனும்
கடுப்பேத்திறவன் கிட்ட கம்முன்னும் இருந்தா...
நம்ம வாழ்க்கை ஜம்முன்னு இருக்கும்..!



### குட்டி

உலகத்திலயே பெரிய ஏமாற்றம்... செல்போன சார்ஜ்ல போட்டுட்டு... சுவிட்ச் போடாம 2 மணி நேரம் கழிச்சு போய் பார்க்கிறதுதான்...



### அனுஜன்

**பெண்:**
என்னை கல்யாணம் பண்ணிக்கிட்டா உங்களோட எல்லா துக்கத்திலையும் நான் பங்கெடுத்துக்குவேன்.
**ஆண்:**
சந்தோசம், ஆனா எனக்கு ஒரு பிரச்சினையும் இப்ப இல்லையே!
**பெண்:**
என்னை நீங்க இன்னும் கல்யாணம் பண்ணிக்கவே இல்லையே!

### அஜந்தன்

**மனைவி:**
உங்களுக்கு ராணின்னு ஏற்கனவே ஒரு மனைவி இருக்கான்னு கல்யாணத்துக்கு முன்பே ஏன் என் கிட்ட சொல்லலை...
**கணவன்:** சொன்னேனே மறந்திட்டியா!
**மனைவி:**
எப்போ சொன்னீங்க நீங்க சொல்லவே இல்லை.
**கணவன்:** உன்னை ராணி மாதிரி வச்சு காப்பாத்துவேன்னு நான் சொல்லல...

### றூபன்

ஒன்னு சொல்லுறேன் நல்லா கேட்டுக்கோங்க
உடம்புல சுகர் இருக்கிறவனும் மனசில பிகர் இருக்கிறவனும் நல்லா தூங்கினதா சரித்திரமே இல்லை!



### கார்த்திகா



ஆளுக்கொரு வேசம், நேரத்திற்கொரு பேச்சு என்றிருப்பவர்கள் தான் வாழ்க்கையை மிக எளிதாக எதிர்கொள்கிறார்கள்..!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# யால தேசிய பூங்காவிற்கு மின்னணு நுழைவுச் சீட்டு




(கொழும்பு)


யால தேசிய பூங்காவிற்குள் பிரவேசிப்பதற்காக மின்னணு நுழைவுச் சீட்டினை வெளியிடும் முறையொன்றை அறிமுகப்படுத்த வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அந்தத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.ஜீ.சி.சூரியபண்டார தெரிவித்தார்.

இணையத்தின் ஊடாக இந்த நுழைவுச் சீட்டு வெளியிடும் முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அவர்தெரிவித்தார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் யால தேசிய பூங்காவிற்கு பிரவேசிக்கும் போது ஏற்படும் அதிக நெரிசலை குறைத்துக் கொள்வதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் இணைய த்தளத்தில் குறித்து நுழைவுச் சீட்டினை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வீதியை விட்டு விலகி சொகுசு பேருந்து விபத்து



(கொழும்பு)

சாரதியின் தூக்கக்கலக்கத்தால் நேற்று அதிகாலை 3 மணியளவில் கொழும்பில் இருந்து திருகோணமலை நோக்கிச் சென்ற அதி சொகுசு பேருந்து ஒன்று கந்தளாய் சந்தியில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

இந்நிலையில் குறித்த விபத்தில் பாரதூரமான எந்த விதமான அசம்பாவிதமும் இடம் பெறவில்லை.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஜ)

# தேசிய நிர்மாணிகள் சங்க வடக்குக் கிளையின் கூட்டம்

(மன்னார்)

தேசிய நிர்மாணிகள் சங்க வடக்கு மாகாண கிளையின் 17ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 10ஆம் திகதி மன்னார் தாழ்வுப்பாடு வீதியில் அமைந்துள்ள "ஆகாஸ்" விருந்தினர் விடுதியில் நடைபெறவுள்ளது. 2019ஆம் ஆண்டுக்கான விருந்தளிப்பு நிகழ்வு மற்றும் நிர்மாணிகள் ஒன்றுகூடல் நிகழ்வு அன்றையதினம் மாலை 6.30மணி முதல் நடைபெறவுள்ளது. நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இலங்கை நீர்ப்பாசனத் திணைக்கள பணியாளர் நாயகம் சீனித்தம்பி மோகனராஜா, விசேட விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரச அதிபர் மற்றும் அரச திணைக்கள உயர் அதிகாரிகள், பொருளியலாளர்கள், வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த நிர்மாணத்துறை ஒப்பந்தகாரர் ஆகியோர் உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (9)

# இலங்கைத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை இல்லை

## இந்திய அரசு அறிவிப்பு

(டில்லி)

**இலங்கைத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க முடியாது என இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.**

நேற்றையதினம் ராஜ்ய சபாவில் புதுச்சேரி அ.தி.மு.க. எம்.பியான கோகுலகிருஷ்ணன், இலங்கைத் தமிழருக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவது தொடர்பாக கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு அரசியலமைப்பு சாசனத்தின் 9ஆவது சரத்தின் கீழ் இரட்டைக் குடியுரிமை வழங்க இயலாது. இலங்கைத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவதற்கான எந்தவொரு ஒப்பந்தம் செய்வதற்கு திட்டமும் இல்லை என உள்துறை இணை அமைச்சர் நித்தியானந்தா ராய் பதிலளித்தார்.

தமிழக அரசியல் கட்சிகள் மத்திய அரசின் குடியுரிமைச் சட்டத் திருத்தத்தை மிகக் கடுமையாக எதிர்த்து வருவதுடன், இலங்கையில் ஒடுக்கப்படும் தமிழர்களுக்கும் இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும் என்றும் தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் கோரிக்கை விடுத்திருந்தன.

இதேவேளை ஈழத் தமிழருக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க வேண்டும் என அ.தி.மு.க வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# சஜித்தின் புதிய கூட்டணியின் சின்னம் மற்றும் பதவிகள் குறித்த அறிவிப்பு விரைவில்

## ரஞ்சித் மத்தும தகவல்





(கொழும்பு)

சஜித் தலைமையிலான புதிய கூட்டணியின் சின்னம் மற்றும் பதவிகள் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

புதிய கூட்டணி குறித்து கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான புதிய கூட்டணியின் நடவடிக்கைகளை மிகவிரைவில் ஆரம்பிக்க இருக்கின்றோம்.

பொதுத் தேர்தல் நெருங்கு வதால் அதற்கான வேலைத் திட்டங்களையே ஆரம்பத்தில் மேற்கொள்ள உள்ளோம். இது தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சி தலைவர்களுடன் கலந்துரையாட இருக்கின்றோம்.

அத்துடன் எமது கூட்டணியின் சின்னம் மற்றும் அதன் பதவிகள் தொடர்பாக கலந்துரையாடியே தீர்மானிக்க இருக்கின்றோம். என்றாலும் மிக விரைவில் சின்னம் மற்றும் பதவிகளை அறிவிப்போம்.

அத்துடன் எமது புதிய கூட்டணிக்கு ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

மேலும் ஜனநாயகத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் அனைத்து அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள் மற்றும் கூட்டணிகளுக்கும் எமது புதிய முன்னணியில் இணைந்து கொள்ள அழைப்பு விடுக்கின்றோம்' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அடைக்கலத் தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோவில் மஹாகும்பாபிஷேகம் நாளை 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.45 மணி முதல் முற்பகல் 10.38 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறும்.

இதேவேளை இன்று வியாழக்கிழமை காலை 9மணிமுதல் மாலை 4 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்தல் இடம் பெறும். (இ-5)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் வருடாந்த வதிவிடக் கருத்தரங்கு எதிர்வரும் 8 ஆம்,9 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.(இ-5)






பண்டத்தரிப்பு வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த இரண்டாம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் கலந்து கொண்டார்.




# நன்மை, தீமை இரண்டையும் ஏற்றுக்கொள்



ஒரு வயதான விவசாயி தன் வயலில் பாடுபட்டு உழைத்து அதில் வரும் சொற்பமான வருமானத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார். ஒரு நாள் அவர் வளர்த்து வந்த குதிரை காணாமல் போய் விட்டது. தகவலைக் கேள்விப் பட்ட அக்கம் பக்கத்தில் வசிப்பவர்கள் "என்ன ஒரு துரதிர்ஷ்ட நிலை?" என்று பரிதாபமாக விசாரித்தனர்.

"இருக்கலாம்" என்று ஒரே வார்த்தையில் அவர்களின் ஆறுதலுக்கு விவசாயி பதிலளித்தார்.

அடுத்த நாள் தொலைந்து போன குதிரை தன்னுடன் மூன்று குதிரைகளை உடன் அழைத்து வந்தது. இதை ஆச்சர்யமாக பார்த்த அக்கம் பக்கத்தினர், "நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி , இப்போ நாலு குதிரை உனக்கு கிடைச்சிடுச்சு" என்றனர்.

தனக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்தைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் மறுபடியும் "இருக்கலாம்" என்று கூறி முடித்தார்.

ஒரு வாரத்துக்குப் பிறகு, விவசாயியின் மகன் குதிரையை வேகமாக ஓட்டிச்சென்று தவறுதலாக கீழே விழுந்து காலை உடைத்துக்கொண்டான். "என்னப்பா, உனக்கு ஒரு நல்லது நடந்தா? அடுத்து ஒரு கெட்டது நடக்குதே. உன் பையன் எழுந்து நடக்க ஆறு மாசத்துக்கும் மேல் ஆகும் போல, ரொம்ப கஷ்டமான நிலைமை" என்று கூறி ஆதங்கப்பட்டனர்.

விவசாயி பெரிதாக வருந்தாமல் "இருக்கலாம்" என்று அதே பதிலைக் கூறினார்.

ஒரே வாரத்தில் நாட்டில் போர் வந்துவிட்டது. வீட்டில் இருக்கும் எல்லா இளைஞர்களும் கட்டாயம் போரில் கலந்துகொள்ள வேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது. வீடு வீடாக இராணுவத்தினர் புகுந்து இளைஞர்களை அழைத்துச் சென்றனர். ஆனால், அந்த ஏழை விவசாயியின் மகனுக்குக் கால் உடைந்து இருந்ததால் அவனை மட்டும் அழைத்துச் செல்லவில்லை.

இதைக் கண்டு ஊர் மக்கள் அந்த விவசாயியின் அதிர்ஷ்டத்தைக் கண்டு புகழ்ந்தனர்.

இப்போதும் அந்த விவசாயி "இருக்கலாம்" என்று கூறினார்.

அவர் ஏன் எல்லாச் சூழ்நிலையிலும் ஒரே மாதிரியான சமமான மனநிலையில் இருந்தார்? என்பதற்கும் காரணம் உண்டு.

அந்த விவசாயி வாழ்வின் இயல்புகளைப் புரிந்துகொண்டவர். நாட்களில் நல்ல நாள், கெட்ட நாள் என்று எதுவும் இல்லை. ஒவ்வொரு நாளும் நமக்கு மறைமுகமாகப் பல பாடங்களை உணர்த்திக் கொண்டிருக்கின்றது. நல்லது, கெட்டது இரண்டும் நாணயத்தின் இருபக்கங்கள். கஷ்டமான சூழ்நிலைகளில், இது நிரந்தரம் அல்ல நாளை என்று ஒன்று இருப்பதை மறக்க வேண்டாம்.

சந்தோசமான சூழ்நிலையில் தலை கால் புரியாமல் ஆடக் கூடாது. யாருக்கு என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். எதையும் தலைக்கு எடுத்துச் செல்லாமல், எதைப்பற்றியும் விமர்சிக்காமல் இருப்பது நலம். சுகம் - துக்கம் இவை இரண்டும் ஒன்றுக்கு ஒன்று தொடர்புடையவை என்பதை உணர்ந்தாலே போதுமானது.

## விடுகதைகளும் விடைகளும்

• குட்டிச்சுவர் ஓரம் இருப்பேன். காலால் உதைப்பேன். என் முகத்தில் விழித்தால் நல்லது நடக்கும் என்பார்கள். பொதி சுமக்கப் பயன்படுவேன்.

**கழுதை**

• பல வண்ணங்கள் உடையது. பார்ப்பதற்கு அழகாய் இருக்கும். தேனைத்தேடி பூவை நாடி பறந்து செல்லும்.

**வண்ணத்துப்பூச்சி**

• கறுப்பு நிறம் உடையது. சங்கீதம் பாடி அனைவரையும் கவர்ந்திழுக்கும் பறவை.

**குயில்**

• ஒற்றைக்காலில் தவம் இருக்கும். ஆனால் முனிவர் அல்ல. நீண்ட அலகு உடையது. அதன் நிறமோ வெண்மை.

**கொக்கு**

• பறக்கும் பறவை அல்ல. பூச்சி வகையைச் சேர்ந்தது. தமிழ் உயிரெழுத்துக்களில் ஓர் எழுத்தைக் குறிக்கும்.

**ஈ**

• நான்கு கால்கள் இருக்கும். ஆபத்து காலத்தில் வாலை துண்டிக்கும். சுவரைக் கண்டால் ஊர்ந்து சென்று ஒட்டிக்கொள்ளும்.

**பல்லி**

• கடிவாளம் போட்டு கண்கட்டி விட்டு நேராகப் பார்த்து செல்லும் வேகத்துக்குச் சொந்தக்காரர்.

**குதிரை**

• சிவப்புக் கொண்டை உடையது. கூரைக்குச் சொந்தம் கொண்டாடும். காலையில் கடிகாரத்துக்கு பதிலாக ஆளை எழுப்பப் பயன்படும்.

**சேவல்**

• தன் இருப்பிடத்திற்குத் தகுந்தவாறு தன் நிறத்தை மாற்றிக் கொள்ளும்.

**பச்சோந்தி**

• காவல் துறையில் பணியாற்றும். திருடர்களைத் தேடி கவ்விப்பிடிக்கும். அத்னிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் மோப்ப சக்தி அதிகம் உடையது.

**நாய்**

• அதனை அடித்தாலும் உதைத்தாலும் தன் உடம்பில் இருந்து வரும் இரத்தம் நிறமற்றது. அது வீட்டிலும் இருக்கும். அது ஒரு பூச்சி வகையைச் சேர்ந்தது. தரையில் ஓடும் சில நேரங்களில் பறக்கும்.

**கரப்பான் பூச்சி**

• கடவுளின் வாகனம். அது வீட்டிலும் இருக்கும். அதனை அடிக்க மாட்டார்கள். ஆனால், துரத்திவிடுவார்கள்.

**எலி**

• நின்று கொண்டே தூங்குவான். தூண்கள் போன்ற கால்கள் உடையவன். முறம்போன்ற காதுகள் உடையவன். நிலத்தில் வாழும் மிகப்பெரிய விலங்கு இவன்தான்.

**யானை**

• சாரை சாரையாய் செல்பவன். சுறுசுறுப்பாய் இருப்பவன். உழைப்புக்குப் பேர்போனவன்.

**எறும்பு**

• தண்ணீரிலே கூட்டமாக நீந்துவான். தட்டையான அலகு உடையவன். இரண்டு கால்களிலும் சவ்வு உடையவன். இவனைக் கழுத்தைப் பிடித்து தூக்குவார்கள்.

**வாத்து**

• படகு போன்ற உடலமைப்பு உடையவன். துடுப்பைப் பயன்படுத்தி நீந்துவான். நீர்நிலைகளில் இருப்பான்.

**மீன்**

## பழமொழிகள்

• உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை.

• காவடிப் பாரம் சுமக்கிறவனுக்குத் தெரியும்.

• அத்திப் பழத்தைப் பிட்டுப்பார்த்தால் அத்தனையும் புழு.

• கள்ளம் பெரிதோ? காப்பு பெரிதோ!

• கேட்டதெல்லாம் நம்பாதே? நம்பியதெல்லாம் சொல்லாதே?

• கொடுக்கிறவனைக் கண்டால் வாங்குகிறவனுக்கு இளக்காரம்.

• எள்ளுக்கு ஏழு உழவு , கொள்ளுக்கு ஓர் உழவு.


• நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு.

• நித்திய கண்டம் பூரண ஆயிசு.

• இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று.

• தங்கம் தரையிலே தவிடு பானையிலே.

## உருவில் உள்ள வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதுமே மண்டியிடுவதில்லை.

~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உங்கள் அறச் செயலால் தர்மம் நிலைக்கும்

நான் பெரிது; நீ பெரிது; இந்த நாடு எனக்கு உரியது; நீ எனக்கு அடிமை என்றெல்லாம் ஆணவம் தலைக்கேறினின்று அதர்மம் செய்வோர், தர்மம் பற்றி இம்மியும் அறியாதவர்கள்.

இந்த உலகப் பிரபஞ்சத்தில் இறைவனை நினைக்கக்கூடிய பேராற்றல் மனிதப் பிறவிகளுக்கு மட்டுமே உண்டு.

எனினும் மனிதர்கள் பலர் கிடைத்தற்கரிய இப்பிறவியை அழிவுக்கும் அதர்மச் செயலுக்குமாகப் பயன்படுத்துகின்றனர்.

இந்த உலகில் அதர்மம் தலைவிரித்தாடும் போது தர்மத்தை நிலைநிறுத்த நான் தோன்றுவேன் என்கிறார் கிருஷ்ண பரமாத்மா.

ஆக, மனிதர்கள் தமக்கு இறைவனால் தரப்பட்ட அன்பெனும் பெருங்கருணையைச் சங்காரம் செய்து வாழ்வதைத் தவிர்க்க வேண்டும்.

அதேநேரம் கண்முன்னே அதர்மம் தலைவிரித்தாடுவதை வெறுமனே பார்த்திருப்பதும் பெரும் பாவம் என்ற உண்மையையும் நாம் உணர்ந்தாக வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, நேற்று முன்தினம் இந்த நாட்டின் 72ஆவது சுதந்திர தின நிகழ்வு நடைபெற்றது.

தமிழில் தேசிய கீதம் பாடுவதை இன்றைய ஆட்சியாளர்கள் தடை செய்து விட்டனர்.

சுதந்திர தின நிகழ்வில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டுமென ஏலவே அரச அறிவுறுத்தல் இருக்கின்ற போதிலும் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைப்பதற்கு இம்முறை தடை விதிக்கப்பட்டது.

தமிழ் மக்களை வஞ்சிக்கும் நோக்கில் இந்த செயல் மேற்கொள்ளப்பட்டதாகவே கருத வேண்டும்.

இதை நாம் கூறும்போது, இந்தியாவில் எத்தனையோ மொழிகள் இருந்த போதிலும் ரவீந்திரநாத் தாகூர் வங்கத்து மொழியில் இயற்றிய தேசிய கீதமே இசைக்கப்படுகிறது.

எனவே இலங்கையிலும் சிங்களத்தில் மட்டும் தேசிய கீதம் இசைப்பதுதானே பொருத்தம் என்று பேரினவாதிகள் கூறுவர்.

71 ஆண்டுகள் இல்லாத ஒரு சிறுமைத்தனத்தை இம்முறை அரங்கேற்றியிருக்கிறீர்கள். பரவாயில்லை. மா புளிப்பது அப்பத்துக்கு நல்லது.

இருந்தும் இங்கு நாம் கேட்பது, இந்தியாவின் தேசிய கீதம் பெருந்தொகையான இந்திய மக்களின் தாய்மொழியான ஹிந்தி மொழியில் இசைக்கப்படுவதில்லை.

அப்படியானால் இலங்கையின் தேசிய கீதத்தைத் தமிழில் மட்டும் இசைத்தால் என்ன என்பதுதான்.

எது எவ்வாறாயினும் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்காமல் விட்டதை எதிர்த்து ஒரு குறிப்பட்ட சிங்கள, முஸ்லிம் சகோதரர்கள் சுதந்திர தினத்தில் தேசிய கீதத்தைத் தமிழ் மொழியில் இசைத்துள்ளனர்.

இத்தகைய மனிதநேயம்மிக்கவர்கள் இருப்பதால் இந்த நாட்டில் தர்மம் நிலைக்கும் என்று அடித்துக் கூறலாம்.

தமிழில் தேசிய கீதம் பாடுவதை இந்த நாட்டின் சமகால ஆட்சியாளர்கள் தடுத்த போதிலும் அதனை எதிர்த்து தமிழில் சிங்களச் சகோதரர்கள் தேசிய கீதம் பாடினர் என்றால், இவர்களுடன் முஸ்லிம் சகோதரர்களும் இணைந்து கொண்டனர் என்றால், இதுவே தர்மத்தின் அடையாளமாகும்.

இத்தகைய சிங்கள, முஸ்லிம் சகோதரர்கள் மனிதத்தை மதிக்கின்ற மாண்பாளர்கள் என்றால் அது மிகையன்று.

# சர்வதேச இராணுவ செயற்பாடுகளில் இலங்கை இராணுவத்தின் பங்குபற்றலை விஸ்தரியுங்கள்

### ரஷ்ய இராணுவத் தளபதி

(கொழும்பு)

சர்வதேச பயங்கரவாதத்தை ஒழிக்கும் செயற்பாடுகளில் இலங்கை வழங்கும் ஒத்துழைப்புக்களை மதிப்பதாக தெரிவித்துள்ள ரஷ்ய இராணுவத் தளபதி ஜெனரல் ஒலேக் சல்யுகோவ், சர்வதேச இராணுவ செயற்பாடுகளில் இலங்கை இராணுவத்தின் பங்குபற்றலை மேலும் விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் தெ ரிவித்துள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் ரஷ்ய இராணுவ தளபதிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது. இதன்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பு தொடர்பில் பிரதமர் அலுவலக ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த சந்திப்பின் போது, இரு நாடுகளினதும் பாதுகாப்புதுறைகள் ஒத்துழைப்புக்களை பலப்படுத்துவது தொடர்பில் இரு தரப்பிலும் கூடுதல் அவதானம் செலுத்தப்பட்டது.

அண்மையில் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த ரஷ்ய வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பு தொடர்பில் இதன்போது கருத்து தெரிவித்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, " சகோதர நாடுகளை பிரதிநிதித்துவப் படுத்தி உயர்மட்ட ராஜதந்திரிகளின் விஜயத்தை மதிப்பதாகவும் ,இவ்வாறான விஜயங்களின் போது இரு தரப்பினரதும் நட்புறவை மேலும் பலப்படுத்துவதற்கு அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பினை வழங்கும்" என்று கூறினார்

இந்த சந்திப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த ரஷ்ய இராணுவத் தளபதி, "இரு நாடுகளுக்கும் இடையில் புரிந்துணர்வுகளை ஏற்படுத்திக்' கொள்ளும் முறை தொடர்பில் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் உங்களுக்கு தெளிவுபடுத்தியதாக கூறினார்." என்றார்.

அத்தோடு இலங்கை இராணுவத்தில் உள்ளவர்களுக்கு இலவசமாக இராணுவ அறிவுரைகள் மற்றும் ரஷ்யாவின் இராணுவ பயிற்சிகளை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்குவதற்கு தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்த ரஷ்ய இராணுவத் தளபதி, சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிராக பொதுவாக முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இலங்கை முழுமையான ஒத்துழைப்பு வழங்குகின்றமைக்கு மதிப்பளிப்பதாகவும் கூறினார்.

சர்வதேச ரீதியில் இரு நாடுகளும் முகங்கொடுக்கும் சவால்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த பிரதமர் மஹிந்த, இரு நாடுகளும் அந்நியோன்ய உறவுகளை வலுப்படுத்துவது அத்தியாவசியமானதாகும் என்று குறிப்பிட்டார்.

இலங்கை - ரஷ்யா நீண்டகால நட்பு நாடுகள் என தெரிவித்த ரஷ்ய இராணுவத் தளபதி, சர்வதேச இராணுவ செயற்பாடுகளில் இலங்கை இராணுவத்தின் பங்குபற்றலை மேலும் விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதமரிடம் கோரிக்கை விடுத்தார். (ம-3)

# தபால் ஊழியர்களுக்கு மின்சார மோ.சைக்கிள் வழங்க தபால் திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

தபால் திணைக்களம் கடிதங்களை விநியோகிப்பதற்காக தபால் ஊழியர்களுக்கு மின்சாரத்தில் இயங்கக்கூடிய மோட்டார் சைக்கிள்களை வழங்கவுள்ளது.

இதற்காக அமைச்சரவை ஆவணம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம்தபால் சேவையை செயற்றிறன் மிக்கதாக முன்னெடுக்க முடியும் என்று தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப இரா ஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பின் போது இந்த மோட்டார் சைக்கிள்களை பெற்றுக் கொள்வதற்காக தபால் ஊழியர்களுக்கு தேசிய சேமிப்பு வங்கியின் மூலம் நிவாரண வட்டியில் கடன் பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். இதேபோன்று மாதத்துக்கு 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவும் வழங்குவதற்கு பரிந் துரைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் இந்த மோட்டார் சைக்கிள்களுக்கு மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தபால் அலுவலகங்களில் வசதிகள் செய்யப்படும் என்றும் கூறினார்.

இதேபோன்று தபால் அலுவலகங்கள் மூலம் துரிதமாக பொதிகளை அனுப்புவதற்காக தபால் பொதி சேவை முன்னெடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். உத்தேச துரித பொதி விநியோக தபால் சேவை கொழும்பு, நுவரெலியா, காலி, கண்டி ஆகிய தபால் அலுவலகங்கள் மூலம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன் பின்னர் 5000 தபால் கிளைகளை உள்ளடக்கிய வகையில் விரிவுபடுத் தப்படவுள்ளது.(ம-3)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா.ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு (இடைநிலை பிரிவு) போட்டி நாளை 7ம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடை பெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் சுபாஜினி மதியழகன் கலந்து கொள்ளவுள்ளார். (ம)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தான அஷ்டபந்தன ஏககுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகம் நாளை 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.33 மணி முதல் 8.05 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறும். (5)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

பகட்டும் படோடோபமும் சிறிது நேர பரவசத்துக்கும் நீண்ட துயரத்திற்கும் அழைத்துச் செல்பவை.

-அரிஸ்ரோட்டில்

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** கொழும்புத்துறை வீதி, AV வீதி, துண்டி, நெடுங்குளம், மணியந்தோட்டம், கெலன் தோட்டம், உதயபுரம், Infentas Ice Solutions Pvt Ltd, நாவற்குழி, கோகிலாக் கண்டி, தச்சன்தோப்பு, மறவன்புலவு, தனங்கிளப்பு, அறுகுவெளி, கைதடி, நுணாவில், Link Readymix (Pvt) Ltd, பனை அபிவிருத்தி சபை, சித்த மருத்துவ பீடம், United Motors Lanka Plc, Excello Holding (Pvt) Ltd, Sanken Construction (Pvt) Ltd, வடமாகாண ஆளுநர் அலுவலகம், Metro Housi ng Construction (Pvt) Ltd, Narayana Cement Production ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** மூன்றுமுறிப்பிலிருந்து பூஓயா வரை, Gowloom Garments, ஈரப்பெரிய குளம் இராணுவ முகாம், SLBC ஈரப்பெரியகுளம்யோசப் படை முகாம், மூன்று முறிப்பு இராணுவ முகாம், Air Point Joint Service Army Camp, BOO Xah, Recbo North, புதுக்குளம் கோவில் குளம் கிராமம், கூமாங்குளம் கிராமம், பகல அளுத்வத்த கிராமம், கிடாச்சூரி, மறவன்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

# சத்திய தரிசனம்

## நல்ல எண்ணம் வேண்டும்



❖ கண்ணுக்குத் தெரியாத கடவுளுக்காக ஏங்குவதை விட கண்ணெதிரே வாழும் தெய்வீகமான தாயை வணங்குங்கள். தாயின் அன்பு கிடைத்தால், இறையருள் பூரணமாகக் கிடைக்கும்

❖ உண்மையான பக்தியும், அசைக்க முடியாத நம்பிக்கையும் இருந்தால் கடவுளை விரைவில் காணும் பாக்கியம் கிடைக்கும்.

❖ வாழ்வில் எத்தகைய பிரச்சினை நேர்ந்தாலும் கவலை வேண்டாம். கடவுளின் பொறுப்பில் உங்களை முழுமையாக ஒப்படையுங்கள்.

❖ தொடக்கத்தில் யாராலும் பற்றற்ற நிலையில் சேவை செய்ய முடியாது. ஆனால், நாளடைவில் தன்னலமற்ற சேவையாற்றும் மனப்பான்மை படிப்படியாக உருவாகும். அதைவிட மேலான மகிழ்ச்சி உலகில் வேறில்லை.

❖ குட்டிப்பூனையின் மென்மையான ஒலி கேட்டு ஓடிவரும் தாய்ப்பூனை போல, பக்தனின் இதயத்தில் இருந்து எழும் குரலைக் கேட்ட மாத்திரத்தில் கடவுள் ஓடி வந்து விடுவார்.

# கட்டைக்காடு சென்மேரிஸ் அணியை வென்று சம்பியனாகியது அராலி பாரதி அணி



பூநகரி இளந்தளிர் விளையாட்டுக்கழகம் நடத்திய வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் அண்மையில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் அராலி பாரதி அணியுடன் கட்டைக்காடு சென்மேரிஸ் அணி மோதியது.

விறுவிறுப்பான ஆட்ட இறுதியில் 1:0 என்ற கோல் கணக்கில் அராலி பாரதி சம்பியன் கிண்ணத்தினை கைப்பற்றியது.

பாரதி அணி சார்பாக டிசாந்தன் வெற்றிக்கான கோலை பெற்றுக் கொடுத்தார்.

போட்டியின் தொடராட்ட நாயகனாக சுபாஸ்கரனும், சிறந்த கோல்காப்பாளராக தர்சனும் பாரதி அணி சார்பாக தெரிவு செய்யப்பட்டனர். (க)

# விக்ரம்- ராஜன்- கங்கு வெற்றிக் கிண்ணம் AB அணியின் முதலாவது வெற்றி



விக்ரம், ராஜன், கங்கு வெற்றிக் கிண்ணத்திற்காக வளர்மதி சனசமூக நிலையம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் முதலாவது போட்டியில் ஏபி அணி யாழ். பல்கலைக்கழக அணியை 8ஓட்டங்களால் வெற்றி பெற்று தங்களது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய AB அணி 25.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 126 ஓட்டங்களை பெற்றனர். தனலக்ஸன்-15, ராகுலன்-22, உத்தமன்-22, லிங்கநாதன்-14 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் யாழ்.பல்கலைக்கழகம் சார்பாக மதுக்க-02, கெட்டியராச்சி, கஜன்தவா-03 இலக்குகளையும் நிதர்சன், சேந்தன் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

127 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ்.பல்கலை க்கழக அணி 30 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றனர். கல்கோகன்-12, டினேஸ்-25, மலின்டா - 11, பிரசாந்-24, துவார கசீலன்-13, சேந்தன்-12 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் AB அணி சார்பாக யதுகுலன்-02, உத்தமன், லிங்கநாதன் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர்.

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தரவரிசைப் பட்டியலிற்கு ( Rating) AB அணி 4.94 புள்ளிகளையும், யாழ்.பல்கலைக்கழக அணி 2.18 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)

# மீண்டும் கிரிக்கெட்டில் களமிறங்கிய டில்ஷான், முத்தையா முரளிதரன்!

இந்தியாவின் இரு நகரங்களில், சாலை பாதுகாப்பு உலக கிரிக்கெட் தொடர் என்ற பெயரில் முன்னாள் கிரிக்கெட் வீரர்களைக் கொண்டு நடத்தப்படும் 20 ஓவர் கிரிக்கெட் போட்டிகள் ரசிகர்களை உற்சாகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்த கிரிக்கெட் தொடரில் இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா, மேற்கிந்திய தீவு, தென்னாபிரிக்காவை சேர்ந்த ஜாம்பவான்கள் பங்கேற்கின்றனர்.

சச்சின் டெண்டுல்கர், வீரேந்திர சேவாக், திலகரத்ன டில்ஷான், முத்தையா முரளிதரன், லாரா, சந்தர்பால், பிரெட்லீ, ஜான்டி ரோட்ஸ் உள்ளிட்ட 110 முன்னாள் வீரர்கள் பங்கேற்கிறார்கள். இந்த போட்டியின் மூலம் கிடைக்கும் வருவாய், இந்தியாவின் சாலை பாதுகாப்பு பிரிவுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொடர் கடந்த 2ஆம் திகதி தொடங்கியது. 16ஆம் திகதி வரை நடக்கவுள்ள கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளது. இந்த தொடரை மகாராஷ்டிர மாநிலத்தில் சாலை பாதுகாப்பு துறையும் , சந்த் பாரத் சுரக்ஷித் பாரத் என்ற அமைப்பும் இணைந்து நடத்துகிறது.

இந்த போட்டியின் மூலம் கிடைக்கும் வருவாய், சாலை பாதுகாப்பு பிரிவுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த தொடருக்கு டைட்டில் ஸ்பொன்சராக "Un academy" என்ற நிறுவனம் இணைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# குப்பிழான் விக்னேஸ்வரா உதைபந்தாட்டத்தொடர்; சம்பியன் கிண்ணத்தை வென்றது வதிரி டைமன்







வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குப்பிழான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் கடந்த 2 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது. கழக தலைவர் த. கணேசநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக பத்மசிறி முனசிங்க, வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பத்மசிறி முனசிங்க, சிறப்பு விருந்தினராக மு.இரட்ணபாலன், கௌரவ விருந்தினராக வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் இ. யுகராஜ், கிராம உத்தியோகத்தர் அ. அகிலன் மற்றும் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உப செயலாளர் அருளானந்தசோதி ஆகியோர் பங்குபற்றினர். மங்கள விளக்கேற்றல் தேசிய, கழக கொடிகள் ஏற்பட்டு கழக செயலாளர் இ.இராகுலனின் வரவேற்புரை நடைபெற்று விருந்தினர்களால் போட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடமராட்சி லீக் அணியான வதிரி டைமன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வலிகாமம் லீக் அணியான குப்பிழான் குறிஞ்சி குமரன் விளையாட்டுக் கழகம் மோதியது.

இப் போட்டியில் டைமன் விளையாட்டுக் கழகம் 4 கோல்களை பெற்றுக்கொள்ள குப்பிழான் குறிஞ்சி குமரன் ஒரு கோலை மாத்திரம் பெற்றுக் கொண்டதால் வதிரி டைமன் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று சம்பியனாகியது.

போட்டியின் சிறந்த வீரராக ர.நிதுசன், சிறந்த கோல் காப்பாளராக சுயீவனும் டைமன் விளையாட்டுக் கழகத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டனர். (க)

## மாணவி ஒருவர்...

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று புதன்கிழமை சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கான பெரியளவு நோய்த்தாக்கங்கள் அவருக்கு இல்லை எனவும் அவருடைய குருதி மாதிரி சோதனையின் பின்னரே அவருக்கு ஏற்பட்டுள்ள வைரஸ் தொற்று தொடர்பில் தெரிவிக்க முடியும் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி. யமுனாநந்தா தெரிவித்தார்.

"அத்துடன் இது தொடர்பில் மக்கள் பீதியடைய தேவையில்லை. குறித்த சந்தேகத்தின் அடிப்படையில் அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எனினும் இது தொடர்பில் நாங்கள் அவருக்கு முழுமையான சிகிச்சை அளித்து வருகின்றோம்.

அந்த மாணவி தனிமைப்படுத்தப்பட்ட விடுதி ஒன்றில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்" என்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார். (ம-18)

## பாடசாலையிலி...

இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மதியம் வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்துக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்து தொடர்பாக தெரிய வருகையில்,

குறித்த பகுதியில் அமைந்துள்ள வாகனம் பழுது பார்க்கும் நிலையத்தில் நின்ற வாகனம் ஒன்றினை அங்கு பணிபுரியும் பெண் ஊழியர் ஒருவர் பின்புறமாக நோக்கி செலுத்தியுள்ளார்.

இதன்போது கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வேகமாக பின்புறமாக நோக்கிச் சென்று வீதியால் பயணித்துக் கொண்டிருந்த இரு துவிச்சக்கர வண்டியுடன் மோதி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தின் வேலியையும் சேதமாக்கியது.

விபத்தில் துவிச்சக்கரவண்டியில் தனது 7 வயது பாடசாலை மாணவனை ஏற்றிச் சென்ற இளம் தாய் உட்பட பாடசாலை மாணவனும் மற்றுமொரு பெண்ணும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது ச. புஸ்பராணி (வயது - 36) என்ற 3 பிள்ளைகளின் தாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பாக வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ம-3,114,250,299)

## வீதி விபத்தில்...

படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் கொக்குவில் பிரம்பிடி வீதியைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தாயாரான பரமலிங்கம் சரஸ்வதி (வயது-66) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரின் மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம)

## கோண்டாவில்...

விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம)

## கிராம அலுவலரி...

நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை பெப்ரவரி 10ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கிராம அலுவலரால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ், நற்சான்றிதழ் உள்ளிட்ட அனைத்து சான்றிதழ்கள், கடிதங்களுக்கு அந்தப் பிரிவுக்குரிய பிரதேச செயலரிடம் ஒப்பம் பெறும் நடைமுறை தற்போது உள்ளது.

இந்த நடைமுறை பொதுமக்களின் நலன் கருதி இரத்துச் செய்யப்படுவதாக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ம)

## விசர் நாய்க்கடிக்...

இதில் அதே பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான பசுபதி சுந்தரலிங்கம் (வயது-50) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

நாய்க்கடிக்கு இலக்கான குறித்த நபர் புதுக்குடியிருப்பு மற்றும் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இவரின் மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம)

## வடமராட்சி கிழக்...

பிரிவிற்குட்பட்ட யாழ். வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, நேற்று பிற்பகல் வீடொன்றில் இருந்து 32 கிலோ கஞ்சா மீட்கப்பட்டதுடன் 52 வயதுடைய சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவரிடம் பளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த சந்தேகநபரையும் சான்றுப் பொருளையும் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-100,316)

## இளம் யுவதி...

சேர்ந்த ஜெயபாலசுந்தரம் சிவசாயினி (வயது-20) என்ற யுவதியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த மாணவி கொக்குவில் இந்துக் கல்லூரியில் கடந்த வருடம் உயர்தர பரீட்சையில் தோற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## மலசலகூட குழி...

களும் கைப்பற்றப்பட்டதாக மல்லாவிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று புதன்கிழமை பிற்பகல் அப்பகுதியில் வெடி பொருட்கள் இருப்பதாக மல்லாவி பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து அங்குள்ள மலசலகூட குழி ஒன்றினை சோதனையிட்டபோது அங்கு ரி56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் 6 மகசீன்கள் மற்றும் ஒரு பை அதற்கான ரவைகளும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-60)

## பொது மன்னிப்...

தாவது,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி 72ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சிறைக் கைதிகளாக விருந்த மேலும் ஐந்து பேரை விடுவிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் ஐவரும் பாதுகாப்பு துறையை சேர்ந்தவர்கள் என்பதுடன், சிறிய குற்றங்களுக்காக சிறைத் தண்டனை வழங்கப்பட்டவர்களாவர்.

இம்முறை சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் விடுதலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 517 ஆகும் என்றுள்ளது. (ம)

## கஞ்சாவுடன்...

படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 33 கிலோ கிராமிற்கும் அதிகமான அளவில் கேரள கஞ்சா மீட்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையில் கடந்த 35 நாட்களில் கடற்படையினரால் 1000 கிலோ கிராமிற்கும் அதிகமான அளவில் கேரள கஞ்சா மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில், 700 கிலோ கிராம் கேரள கஞ்சா வடக்கு கடற்பரப்பில் இருந்து மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## நடந்து சென்ற...

டார் சைக்கிளை செலுத்திச் சென்ற இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நெல்லியடி - கொடிகாமம் வீதியில் உள்ள துன்னாலை வேம்படிப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் துன்னாலை தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த சிவபாதம் சுலோசனா (வயது-74) என்ற வயோதிப மாது ஸ்தலத்திலேயே பலியானார்.

மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற அதே இடத்தைச் சேர்ந்த இராஜேஸ்வரன் இரதன் (வயது-21) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வீதியால் சென்று கொண்டிருந்த வயோதிப மாதுவை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதாக கூறப்படுகிறது.

இதில் வயோதிப மாது ஸ்தலத்திலேயே பலியானதுடன் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த இளைஞர்கள் படுகாயங்களிற்கு உள்ளாகினர்.

பலியான வயோதிப மாதுவின் சடலம் மரண விசாரணைக்காகவும் பிரேத பரிசோதனைக்காகவும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த இளைஞர் ஆபத்தான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-60)

# கொரோனா சந்தேகத்தில்

## பதுளை யுவதி வைத்தியசாலையில்

பதுளையில் கொரோனா வைரஸ் தொற்று என்று சந்தேகிக்கப்படும் அறிகுறிகளுடன் யுவதியொருவர் பதுளை பொது வைத்தியசாலையில் நேற்று மாலை அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சீனாவின் யுன்னான் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் குறித்த யுவதி சில தினங்களுக்கு முன்பே இலங்கை வந்தடைந்துள்ளார்.

22 வயதுடைய மொனராகலையைச் சேர்ந்த இவர், பதுளை வைத்தியசாலையின் விசேட சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)


கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 05-02-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2383
வெற்றி இலக்கங்கள் T 01 09 17 45
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 2020/02/05
சீட்டிழுப்பு இலக்கம் 0494
வெற்றி இலக்கங்கள் C 03 08 23 35 79

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 05-02-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1015
வெற்றி இலக்கங்கள் F 5 9 1 4 6 2
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2020.02.05
சீட்டிழுப்பு இலக்கம் - 261
M 30 41 42 44
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

ராசி அதிர்ஷ்டம்
திகதி 05/02/2020 வெற்றி வாரம் 2760 வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் தனுசு 11 41 47 55
வியாழக் கிழமை வெற்றி பொதி ரூ. 2,667,444
2020/02/06 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
www.dlb.lk

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 320
சீட்டிழுப்பு திகதி 05.02.2020 நீலம்
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 02 08 63 விதி எண் 9
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ. 51,241,716
2020/02/07 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 874
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.02.05
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,765,950/-
வெற்றி இலக்கங்கள் 15 19 47 64 I

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல: 3297 திகதி: 2020.02.05
பச்சை புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 02 13 44 72 S
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 31,891,780/-

# என்னை மன்னித்து விடுங்கள்

# இலங்கையில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட சீனப்பெண்!

## நெகிழ்ச்சியான பதிவு வெளியீடு

(கொழும்பு)

**இலங்கையில் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டதாக கண்டு பிடிக்கப்பட்ட சீன பெண் இலங்கையர்களிடம் மன்னிப்பு கோரியுள்ளார். we chat எனும் தொழில்நுட்பத்தின் ஊடாக மன்னிப்பு கோரியுள்ளார். தன்னால் இலங்கையர்களுக்கு ஏற்பட்ட சிரமம் தொடர்பில் மன்னிப்பு கோருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.**

நான் முதலில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அனைவரும் என்னை கண்டு அச்சமடைந்தார்கள். பலர் பதற்றமடைந்தார்கள். இந்த நோய் தொற்றியது எனக்கு தெரியாது.

இதனால் இலங்கை மக்களுக்கு ஏற்பட்ட சிரமம் குறித்து நான் மன்னிப்பு கோருகின்றேன். நான் இந்த தொற்றுக்குள்ளானேன் என்பதனை என்னால் இன்னமும் நம்ப முடியவில்லை.

நான் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காகவே வுஹான் சென்றேன். பின்னரே இலங்கை வந்தேன். அதன் பின்னர் இரவில் எனக்கு நோய் அறிகுறிகள் காணப்பட்டது. இதனால் இங்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன். நான் வைத்திய சாலை அறையில் அழுது கொண்டே இருந்தேன். அங்கு ஒரு பிரதான தாதி என்னை சமாதானப்படுத்தினார்.

எனக்கு தேவையான அனைத்தையும் கொண்டு வந்து தந்தார். வைத்தியர்கள் தினமும் எனக்கு ஆறுதல் சொன்னார்கள். அதே போல் சுற்றுலா துறையின் முன்னாள் பிரதிநிதி ஒருவரும் இணையத்தளம் ஊடாக தொடர்பு கொண்டு என்னை தேடி பார்த்தார்.

எனக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக அறிந்த சமயத்தில் மிகவும் சிரமமடைந்தேன்.

முதலாவது சோதனையில் கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்படவில்லை. மூன்றாவது நாள் கொரோனா இருப்பது உறுதியானது.

எனது பிரதான வைத்திய அதிகாரிகள் மிகவும் நல்லவர்கள். சில நாட்களில் பின்னர் என்னால் வீட்டிற்கு செல்ல முடியும் என அவர்கள் கூறினார்கள். என்னுடன் புகைப்படமும் எடுத்துக் கொண்டார்கள். என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

### புதுக்குடியிருப்பிலிருந்து யாழ் நோக்கிய .

# அரச ஊழியர்களுக்கான இ.போ.ச. சேவை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

புதுக்குடியிருப்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி அரச ஊழியர்களுக்காக நேற்று புதிய சேவையை ஆரம்பித்த இ.போ.ச பேருந்து நேற்றுடனே தற்காலிகமாக தனது சேவையை இடைநிறுத்தியுள்ளது.

தனியார் பேருந்து சங்கத்தினர் குறித்த பேருந்தை வழிமறித்து அட்டகாசத்தில் ஈடுபட்டதால் எதிர்வரும் திங்கட்கிழமை வரை குறித்த சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கைவேலி, புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை வீதியில் அமைந்துள்ள அரச அலுவலகங்களில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்களில் பெருமளவானவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து செல்வதால், தமக் குரிய பேருந்து சேவையொன்றை ஏற்படுத்தி தருமாறு இ.போ.ச நிர்வாகத்திடம் கடந்த பல வருடங்களாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதனடிப்படையில் போக்குவரத்து அதிகாரசபையின் அனுமதியுடன் முதலாவது சேவை நேற்று ஆரம்பித்தது. யாழிலிருந்து காலையில் பயணிகளைஏற்றிக்கொண்டு சென்ற இ.போ.ச பேருந்து, அங்கு பயணிகளை இறக்கி விட்டு, தரித்து நின்று மாலையில் மீண்டும் புறப்படதயாரானது. இதன்போது, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் முன்பாக நின்ற இ.போ.சவின் முன்பாக தனியார் பேருந்தை நிறுத்தி, இ.போ.ச நகர விடாமல் தகராற்றில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் அந்த பேருந்தில் பயணித்த அரச உத்தியோகத்தர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டதாக தெரிவித்தனர். சுமார் 20 நிமிடங்கள் தமது பேருந்தை நகரவிடாமல் தடையேற்படுத்தியதாக குற்றம் சுமத்தியுள்ளனர்.

பின்னர், அரச ஊழியர்களின் பேருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி பயணத்தை தொடர்ந்தபோது, குறிப்பிட்ட தனியார் பேருந்தின் உரிமையாளர் இ.போ.சவில் ஏறி வேறு இடத்தில் பயணிகளை ஏற்றக்கூடாது எனக்கூறியபடி பரந்தன் வரை பயணித்ததாகவும், அரச ஊழியர்களிற்கான சேவையில், அரச ஊழியர் அல்லாத ஒருவர் பயணித்ததாகவும் அரச ஊழியர்கள் தெரிவித்தனர்.

இந்த முறைப்பாடுகளை அடுத்து இன்றும் நாளையும் குறித்த சேவையை ,இடைநிறுத்தி கடந்த திங்கட்கிழமை தனியார் போக்குவரத்து சங்கத்துடன் கலந்துரையாடி சேவையை தொடரவுள்ளதாக் கிளிநொச்சி சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ம-9)


**விற்பனைக்கு**

பிறவுண் றோட் கல்வாரி சேர்ச் அருகில் உள்ள லேனில் 5 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 076 702 3565 (2060)

**காண்டம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற் றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின் றோம்.

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்) (C-2069)

**காணி விற்பனைக்கு**

யாழ்.பலாலி வீதி புன்னாலைக் கட்டுவன் வடக்கு (விமான நிலையத்திற்கு அண்மையில்) 8 பரப்பு காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :- 075 543 2918 / 077 323 7891 (2048)

**வேலையாட்கள்**

நெல்லியடியில் அமைந்துள்ள பலசரக்கு கடையொன் றிற்கு வேல்லயாட்கள் தேவை. (ஆண்கள்)

தொடர்புகளுக்கு :- 077 983 5705 (2051)

**Rajah Chess Training Centre**
**(சதுரங்க வகுப்புக்கள்)**

அரசடி வீதி, பிறவுண் றோட் சந்தி (யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில்)

ச.நிர்மலறாஜா

07.02.2020 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணியில் இருந்து

T.P:- 077 343 3701 (C-9159)

**வேலைவாய்ப்பு**

யாழ் நகரில் அமைந்துள்ள தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை. விற்பனையாளர், கண்க்காளர் - கணனி அறிவுடையோர். முன் அனுபவம் இல்லாதவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு :- 077 3611282 (2053)

**நெல்லியடியில்...**

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576

அருள்



பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-9122)

**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**



UK - 550*/=Kg

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

0768226240

V2 TRAVELS (C-8785)

**வேலைவாய்ப்பு**

அரசாங்கத்தின் அனுமதி பெற்ற விளம்பர நிறுவனத்தின் 2020க்கு புதிய அனுமதிகள் மேற்பார்வையாளர், முகாமையாளர், உதவி முகாமையாளர், அலுவலக உதவியாளர்.

முதல் 3 மாத பயிற்சியுடன் ஊக்கத்தொகையும் பின் 16,500/= - 25,000/= பணி நியமனம் வழங்கப்படும். 6 மாத பயிற்சியை நிறைவு செய்து கொள்ளும் அனைவரும் சான்றிதழுடன் மாத வருமானம் 45,000/= அதற்கு மேல் பெறமுடியும்.

T.P:- 077 157 1699 / 076 666 8385 (2059)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.